பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 16 சனிக்கிழமை (28.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:094

# பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு ஒத்துழைப்பு அவசியம்

## சார்க் நாடுகளிடம் கோருகிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, பெப்ரவரி 28

**பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு சார்க் நாடுகள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.**

**நேற்றுக் கொழும்பில் சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.**

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தை இரட்டிப்பாக்க வேண்டிய தருணமிதுவென்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தென்னாசிய பிராந்தியத்தைச் சேர்ந்த நாங்கள் இன்று பல பொதுவான சவால்களை எதிர்கொள்கிறோம். கூட்டுச் சவால்களுக்கு கூட்டு முயற்சிகள் அவசியம்.

பயங்கரவாதம் அவ்வாறான சவால்களில் ஒன்று. அது எங்கள் மீது செலுத்தும் தாக்கம் காரணமாக இது குறித்து உடனடி ஒருமித்த கவனம் அவசியம்.

பயங்கரவாதத்தின் தீமையை எமது சமூகங்கள் அனுபவித்துள்ளன. பயங்கரவாதிகள் கட்டவிழ்த்து விடும் வன்முறையால் தென்னாசியாவின் ஒரு பிரஜை கூட பாதிக்கப்படுவதற்கு நாம் அனுமதியளிக்கலாகாது.

முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும்

இதன் காரணமாக பயங்கரவாதத்தை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் நாடாளுமன்றுக்கு முன்னால் தீக்குளிப்பு முயற்சி

லண்டன், பெப்.28

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு வெளியே நேற்று தீக்குளித்த ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒருவர் தீக்குளித்ததாக பிரிட்டிஷ் பொலிஸாரின் ஆரம்ப விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டன் அம்புலன்ஸ் சேவையினர் சம்பவ இடத்தில் இருந்து அவரை கூட்டிச் சென்று ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர்.

அவரது உடலில் தீக்காயங்கள் காணப்பட்டன என அம்புலன்ஸ் சேவையினர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் விமானம் சுடப்பட வில்லை; விமானப்படைப் பேச்சாளர் சொல்கிறார்

கொழும்பு பெப் 28

வன்னி வான் பரப்பில் பறந்த விமானப் படையினரின் விமானம் ஒன்று நேற்றுக் காலை விடுதலைப் புலிகளால் சுட்டு விழ்த்தப்பட்டது என இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் இலங்கை விமானப்படையினரின் எந்த விமானங்களும் விடு தலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகவில்லை என்று விமானப்படையின் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜானக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன் -

விமானப்படையினரின் விமானங்கள் நேற்று வான் தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை. அது பொய்யான தகவல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புதுக்குடியிருப்பு கள முனையில் 5 படையணிகள் சண்டையில்...!

கொழும்பு, பெப். 28

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளிடம் எஞ்சியுள்ள கடைசி நகரமாகிய புதுக்குடியிருப்புப் பகுதியை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக இராணுவத்தினர், ஐந்து படையணிகளை அந்தப் பகுதியில் நடவடிக்கை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தெற்கில் எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம்; மக்களை எச்சரிக்கை செய்கிறது அரசு

கொழும்பு, பெப்.28

தோல்வியின் விளிம்பில் இருக்கும் புலிகள் தெற்கில் எந்நேரமும் தாக்குதல் நடத்தக்கூடும் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன நேற்றுக் கூறினார்.

இது தொடர்பாக மிக அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் இப்போது தோல்வியின் விளிம்பில் இருக்கின்றனர். அவர்களால் படையினருக்கு எதிராக எந்தவிதமரன தாக்குதல்களையும் நடத்த முடியாது. விரக்தியிலும் கடும் கோபத்திலும் உள்ள புலிகள் தெற்கில் எந்நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம்.

இது தொடர்பாகத் தென்பகுதி மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். கொழும்பு மக்களும் மிக விழிப்புடன் இருக்க வேண்டும்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு எம்மிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை. ஐரோப்பிய ஒன்றியம் கூட ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு புலிகளுக்கு அழுத்தங் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

எமது நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியமும் ஏற்றுக்கொண்டுள்ளது. எமது யுத்த நடவடிக்கை தொடர்பில் சர்வதேச

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்ய வெள்ளைவானிலும் வரலாம் என்கிறார் அமைச்சர்

### வித்தியாதரனின் கைது குறித்து மக்கள் கலவரமடையத் தேவையில்லையாம்

கொழும்பு, பெப். 28

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் ஜீப்பில் வரவேண்டிய தேவையில்லை என்றும் தாம் விரும்பிய எந்த வாகனத்திலும் வரலாம் என்றும் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன நேற்றுக் கூறினார்.

'சுடர் ஒளி' ஆசிரியர் வித்தியாதரன் கைது செய்யப்பட்டாரே அன்றி கடத்தப்படவில்லை என்பதால் இது குறித்து மக்கள் எவரும் கலவரமடையத் தேவையில்லை -என்றும் அவர் சொன்னார்.

அரசு தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

'சுடர் ஒளி' ஆசிரியர் வித்தியாதரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். அவர் கடத்தப்பட்டார் என்று சிலரால் கூறப்பட்டது. அது பொய்.

பொலிஸார் ஜீப்பில் வராமல் வேறு வாகனத்தில் வந்தார்கள் என்பதால் அதைக் கடத்தல் என்று சொல்ல முடியாது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைதுசெய்ய பொலிஸார் ஜீப்பில் வர வேண்டும் என்ற தேவையில்லை.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து வருவோருக்கு சிகிச்சை அளிப்பதில் கடும் சிக்கல்

### எல்லையற்ற மருத்துவ அமைப்புத் தகவல்

கொழும்பு, பெப்.28

வன்னியிலிருந்து கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சையளிப்பது கடும் சவாலாக மாறியுள்ளதாகத் தெரிவித்துள்ள எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு, திருகோணமலை மருத்துவமனைகள் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன எனவும் மேலும் அங்கு மருத்துவ உதவிகள் மேலதிகமாகத் தேவைப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கொண்டுவரப்பட்டவர்கள் நீண்ட நாள் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர் எனவும் இதன் காரணமாக இவர்களில் பலர் அங்கவீனர்களாகியுள்ளனர் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக எல்லைகளற்ற மருத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து கொண்டுவரப்பட்ட 15 சிறுவர்களுக்கு கொழும்பில் சிகிச்சை

கொழும்பு, பெப். 28

வன்னிப்பகுதியில் இருந்து காயமடைந்த நிலையில் திருகோணமலைக்குக் கொண்டு வரப்பட்ட ஐந்து சிறுமிகள் உட்பட பதினைந்து சிறுவர்கள் கொழும்பில் உள்ள சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களின் உடல் நிலை நன்கு தேறிவருகின்றது எனவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித் திருக்கின்றது.

இந்தச் சிறுவர்களின் உடல்களில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களே காணப்படுகின்றன எனவும், திருகோணமலை மற்றும் அனுராதபுரம் மருத்துவமனைகளில் இருந்து கொழும்புக்கு மாற்றப்பட்ட இந்தச் சிறுவர்கள் பூரணமாகக் குணமடைந்ததும், அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்திருக்கிறது. (அ-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

'வடக்கின் பெரும்போர்' ஆட்டம்

# சென்றல் வலுவான நிலையில்! வெற்றியை தீர்மானிக்கும் இறுதிநாள் இன்று!!

யாழ்ப்பாணம், பெப்.28

'வடக்கின் பெரும்போர்' என வர்ணிக்கப்படும் சென்.ஜோன்ஸ் - சென்றல் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் சென்றல் அணி வலுவான நிலையில் உள்ளது.

கடைசிநாளான இன்று 272 ஓட்டங்கள் வெற்றி இலக்காக சென்.ஜோன்ஸ் அணிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எந்த அணி வெற்றிபெறப் போகின்றது என்பது இன்று தெரிந்து விடும்.

சென்றல் அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து ஆடிய சென்.ஜோன்ஸ் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாம் இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த சென்றல் அணி நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது.

நண்பகல் மதிய உணவு இடைவேளையின் பின் சிறிது நேரத்தில் 52 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

செல்ரன் 73 பந்துகளில் 76 ஓட்டங்களையும் எட்பேட்எடின் 54 பந்துகளில் 48 ஓட்டங்களையும் மற்றும் ஜெனோசன் 43, ஜெரிக்துஷாந் 29 ஓட்டங்களையும், கோபிகன், ரதீசன் தலா 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 17 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பிரியதர்சன் 16 ஓவர்கள் பந்து வீசி 74 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கஜீபன் 7 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஹரிப்பிரவின் 9 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 30 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

407 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி இரண்டாம் நாள் ஆட்ட நிறைவில் 42 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஹரிபிரவின் 106 பந்துகளில் 75 ஓட்டங்களையும், பிரியதர்சன் 28 பந்துகளில் 17 ஓட்டங்களைப் பெற்றுள்ளதுடன் விதுசன் 18, பிரணவன் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளார்கள். உதிரிகளாக 14 ஓட்டங்கள் பெறப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அலன்குமார் 9 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஜெரிக்துசாந் 12 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கோபிகன் 11 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 33 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளார்கள்.

இறுதிநாளான இன்று சென்.ஜோன்ஸ் அணிவசம் 5 விக்கெட்டுக்கள் உள்ளன. 272 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இரு அணிகளும் வெளிப்படுத்தும் இன்றைய ஆட்டம் வெற்றியாருக்கு என தீர்மானிக்கப் போகின்றது.

(1-68)

# பொன் அணிகளின் ஆட்டம் விறுவிறுப்பாக ஆரம்பமானது

வலி.வடக்கு, பெப்.28

பொன் அணிகளின் மோதல் கிரிக்கெட் போட்டி நேற்று காலை 9.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது.

பூவா, தலையா போட்டதில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி களத்தடுப்பில் ஈடுபட, யாழ்ப்பாணக் கல்லூரி துடுப்பெடுத்தாடியது.

யாழ்ப்பாணக் கல்லூரி 52.4 ஓவர்களில் அனைத்து விக்கெட் டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

நிகேதன் 178 பந்துகளில் 88 ஓட்டங்களையும் நிலோசன் 35, ஸ்ரீகுகன் 12 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நிலோசன் 13.4 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், நவதீபன் 8 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டு களையும், மைக்கல் 7 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சஜீந்திரன் 11 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென். பற் றிக்ஸ் கல்லூரி 43 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவுபெற்றது.

கமில்டன் 39, மனோஜ், ஜெகான் தலா 20 ஓட்டங் களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் பந்து வீசிய கஜநாதன் 13 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நிகேதன் 8 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 13 ஓட்டங்க ளுக்கு ஒரு விக்கெட்டையும் ஜோகல் சிகான் 8 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் மைக் கல், சஜீந்திரன் ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இன்று காலை 9 மணிக்கு இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமாகவுள்ளது.

(1-86)

# வன்னி மாணவர்களை விடுவித்து கல்விச் செயற்பாட்டை தொடர அனுமதிக்குக

## சகல தரப்புகளிடமும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோருகிறது

யாழ்ப்பாணம், பெப்.28

வன்னியில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களை விடுவித்து அவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர சகல தரப்புக்களும் உதவ வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வன்னி முகாம்களிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டதாக செய்திகள் வருகின்ற போதும் இதுவரை எந்த மாணவரும் பல்கலைக்கழகத்திற்கு வந்துசேரவில்லை. மெனிக்பாமிலுள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டதாக ஊடகம் ஒன்றில் தகவல் வெளியாகியிருந்தது. ஆனால் அந்த மாணவர்கள் இதுவரை பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவில்லை.

எமது சில மாணவர்கள் வன்னி முகாம்களில் தங்கியிருப்பதாகவும் அவர்களை விடுவித்து கல்வியைத் தொடர அனுமதிக்க வேண்டி அவர்களது உறவினர்களும் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து கற்றல் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அந்த மாணவர்கள் நாட்டின் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக ஏற்கனவே தமது கல்வியைத் தொடர முடியாத சூழ்நிலையில் இருந்துள்ளார்கள். உடனடியாக பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டு அவர்களது மாணவப் பதிவுகளை உறுதி செய்து மாணவர்களின் எதிர்கால நலன் கருதி அவர்களை விடுவித்து கல்விச் செயற்பாடுகளை தொடர அனுமதிக்கும்படி வேண்டுகிறோம் - என்றுள்ளது.

(1)

# மோதலில் சிக்கியுள்ள மக்கள் குறித்து மீண்டும் கவலைப்படுகின்றது இந்தியா!

கொழும்பு, பெப். 28

இலங்கையில் மோதலில் சிக்கியுள்ள மக்கள் குறித்த இந்தியாவின் கவலையை மீண்டும் வலியுறுத்தியுள்ள இந்திய வெளி விவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன், அரசியல் தீர்வை நோக்கிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் தீவிரமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

சார்க் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டிற்காக கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிவ்சங்கர் மேனன் இங்குள்ள இந்தியச் செய்தியாளர்களுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வட பகுதியில் காணப்படும் மனிதாபிமான நிலைமையே எமது கவலையாகும் என சிவ்சங்கர் மேனன் குறிப்பிட்டுள்ளார்.

மோதல்கள் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நேரடியாக உதவுவதற்காக அவசர மருத்துவப் பிரிவொன்று அனுப்பப்படும்.

சார்க் அமைப்பின் நிலையியல் குழுவின் 36ஆவது கூட்டத் தொடரின்போது இலங்கை அதிகாரிகளிடம் பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் இதன்போது உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் அவசர மருத்துவ தேவைகளைத் தீர்ப்பதற்காக இணைந்து செயற்பட இரு தரப்புகளும் இணங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மருத்துவக்குழுவில் மருத்துவர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள், தாதிகள் அடங்கியிருப்பர். இவர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ள மக்களுக்கு நேரடியாக சிகிச்சை வழங்குவர்.

''அரச கட்டுப்பாடற்ற பகுதி மக்களுக்கு உடனடியாக உதவுவதே இதன் நோக்கம். மக்களின் மனிதாபிமான அவலங்களைக் குறைக்க விரும்புகிறோம்'' என மேலும் தெரிவித்துள்ள சிவ்சங்கர் மேனன், நிவாரணப் பொருள்களை தொடர்ந்தும் வழங்குவதற்காகப் புதுடில்லி தமிழ் நாட்டுடன் சேர்ந்து செயற்படும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் வட பகுதியில் புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதில் இலங்கை அரசுடன் இந்தியா சேர்ந்து செயற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் தீர்வை நோக்கிய செயற்பாடுகள் தேவையென்றும் அவர் தீவிரமாக வலியுறுத்தியுள்ளார்.

''புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்கு அப்பால் நாம் அரசியல் தீர்வே முக்கியமானது என்று சிந்திக்க வேண்டும். இது அதிகாரப் பகிர்வை விட அதிகமானதும் முக்கியமானதும் ஆகும். அரசியல் தீர்வே எமக்கு முக்கியமானதாக இருப்பதால் அது குறித்து இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுகளை மேற்கொள்ளப் போகிறோம்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரி நிலையத்தில் பொக்குளிப்பான்

யாழ்ப்பாணம், பெப்.28

தென்மராட்சியில் இயங்கும் மிருசுவில் நலன்புரி நிலையத்தில் பலர் பொக்குளிப்பான் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நோயினால் பீடிகப்பட்டவர்கள் முகாமில் இருந்து வெவ்வேறு தங்குமிடங்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

சில நோயாளிகள் முன்னர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் அங்கு சிகிச்சைபெறும் ஏனைய நோயாளிகளின் நன்மை கருதி தனியாக அவர்கள் தங்க வைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-131)

## மிருசுவில் நலன்புரி நிலையத்துக்கு மேலும் 45 பேர் வந்தனர்

யாழ்ப்பாணம்,பெப்.28

தென்மராட்சியில் இயங்கும் மிருசுவில் நலன்புரி நிலையத்தில் நேற்று முன்தினம் 45 பொது மக்கள் படையினரால் சேர்க்கப்பட்டனர். இவர்கள் வன்னிப் பகுதியில் இருந்து பாதுகாப்பாக வெளியேறி வந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர்களது நலன் தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(அ-131)

## சாந்தையர் மட ஆலய போட்டிகள் நாளை

யாழ்ப்பாணம்,பெப்.28

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் ஏற்பாட்டில் கோலம் போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகளும் நீதி நூல் மனனப் போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு பற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என சைவ சமய அபிவிருத்திக்குழுவின் பரீட்சை செயலாளர் சு. சிறீகாந்தன் தெரிவித்தார்.

(1)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி சோணைமுத்து சுபாஷினியின் அன்புத் தந்தையார்

**கருப்பன் சோணைமுத்து**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து இரத்தினம்

உரும்பிராயைப்பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இரத்தினம் நேற்று(27.02.2009)வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்துவின் (மணியம்) அன்பு மனைவியும், குமாரசாமி (கனடா), காலஞ்சென்ற சிவசாமி (இந்தியா), துரைச்சாமி (பொதுமுகாமையாளர், மானிப்பாய் பலநோ. கூட்டுறவுச்சங்கம்), செல்வராசா(சுவிஸ்) லிங்கேஸ்வரி, சற்குணராஜா (கிளை முகாமையாளர், மானிப்பாய்ப.நோ.கூ.ச.) சிறிஸ்கந்தராஜா (கனடா), சர்வேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வைரவர் கோயிலடி,*
*சண்டிலிப்பாய் 0776116792*

தகவல்:-
பிள்ளைகள்.

### பொன்னையா பாக்கியம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாக்கியம் நேற்று (27.02.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலகிருஷ்மேஸ்வரன், கந்தசுவாமி(கனடா), றஞ்சிதராணி (கொழும்பு), விபலினிதேவி (பட்டு - ஆசிரியை, சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு தாயாரும் தேவசேனா (ஆசிரியை), ஜெயலட்சுமி (கனடா), குகநேசன் (ஆசிரிய ஆலோசகர்), இரட்ணவேல் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச சபை, புத்தூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மகேஸ்வரி, இராசமணி, கதிரவேலு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2009) சனிக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிந்துசிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி வீதி,*
*சிறுப்பிட்டி வடக்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
இரட்ணவேல்
(மருமகன்).

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# முல்லைத்தீவு மக்களின் இருமுக அவலமும் அழிவும்

வன்னியில்-முல்லைத்தீவில்- ஒரு சிறு குறுகிய பிரதேசத்தில்-முடங்கிப்போய் வசிக்கும் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கை, நினைத்துப்பார்க்கமுடியாத அளவுக்கு பரிதாபகரமாகவுள்ளது. நாளாந்தம் அவர்களின் அவலங்களும், துன்பங்களும், ஆபத்துகளும் அதிகரித்து வருகின்றனவே அன்றி, குறைவதாக இல்லை.

குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல், விமானத் தாக்குதல் ஆகியவற்றால் நாளாந்தம் பலர் உயிரிழப்பது போரின் ஒரு முகம். அது அழிவுமுகம்.

மிகக்குறுகிய பிரதேசத்துக்குள் லட்சக்கணக்கான மக்கள் முடங்கிப்போய்க் கிடப்பதால் அவர்களின் வாழ்வாதாரம் அசைக்கப்பட்டு - புரட்டப்பட்டு- வாழ்வதைவிட செத்துவிடுவது மேல் என்ற விரக்தியின் உச்சத்திற்குத் தள்ளப்பட்டிருப்பது - நரக வாழ்க்கையை விட மோசமாகி, இருப்பது - இன்னொரு முகம்.

முதலாவது வகை- அந்த மக்களின் - உயிர்களை உடனடியாகக் காவுகொண்டுவிடுகிறது. இரண்டாவது வகை அந்த மக்களை நிமிடத்துக்கு நிமிடம் வதைக்கிறது. அடிப்படை வசதிகள் இன்றி, போதிய உணவின்றி, போசாக்கின்றி, உடனடியாகத் தேவையான மருந்து வகைகள் இன்றி, உயிர்காக்கும் பிரதான மருந்துகள் இன்றி, மருத்துவ வசதிகள் இன்றி எந்தநேரத்தில் சாவை அணைத்திடநேருமோ என்ற ஏக்கத்துடன் வினாடிக்கு வினாடி அஞ்சி அஞ்சிச் சாகும் அதி ஆபத்தான நிலைக்குத் தள்ளியுள்ளது.

அவர்களின் இந்த நிலைமை - உண்மை நிலைமை - உரிய முறையில் வெளிப்படுத்தப்படவில்லை. இப்போதுதான் அவர்கள் செத்துக்கொண்டே வாழும் நிலைமை மெல்ல வெளிவரத் தொடங்கியுள்ளது. உலக சுகாதார நிறுவனமும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் வெளியிட்டுள்ள அறிக்கைகள் முல்லைத்தீவு வாழ் தமிழ் மக்களின் மிகப் பிந்திய அவல நிலையை சிறிதளவேனும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

வன்னியில் மோதல் நடைபெறும் பகுதிகளில் சுகாதார சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று உலக சுகாதார நிறுவனம் தனது பிந்திய அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்களின் உடல்நலம் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால், அங்கு நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகளை மேலும் பலப்படுத்துமாறு உலக சுகாதார நிறுவனம் தனது அறிக்கையில் கேட்டுள்ளது.

மக்கள் பொழுதுக்குப் பொழுது இடம்பெயர்ந்துகொண்டிருப்பதால், மக்களுக்குரிய முறையான சிகிச்சைகளை உரியவாறு செய்ய இயலாத தன்மையால் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகவும் உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மொத்தத்தில் முல்லைத்தீவு மக்களின் நோய் எதிர்ப்புத் திறனை உயர்மட்டத்தில் வைத்திருக்கமுடியாத துரதிர்ஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கை அபாயச் சங்கு ஊதியுள்ளது. அதாவது நோய் எதிர்ப்புத் திறனை இழப்பதால் சிறுவர்கள் மட்டுமன்றி மத்திய வயதினர் உட்பட மக்கள் சமூகத்தின் பெரும் பங்கினர் இயற்கையாகவே அழிந்தொழியும் ஆபத்து உருவாகிவருகிறது என்பதாகும்.

இவற்றை நிவர்த்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாவிடில், முல்லைத்தீவில் வாழும் மக்களின் சுகாதார நிலைமை மேலும் மோசமடையும் என்றும் -

மக்கள் மலேரியா, டெங்கு போன்ற நோய்களால் பாதிக்கப்படும் அபாயம் உருவாகும் என்றும்- உலக சுகாதார நிறுவனம் மேலும் எச்சரித்திருக்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக பெரும் எண்ணிக்கையானோர் உளரீதியான பாதிப்புக்கு ஆளாக நேரிடும் என்றும் அது எடுத்துக்கூறியுள்ளது. இது நினைத்துப்பார்க்கமுடியாத மிகவும் ஆபத்தான நிலைக்கு மக்களை இட்டுச் செல்லப்போகிறது. அவலமும் வேதனையும் நிகழ்காலத்தோடு ஓய்ந்துவிடாது, எதிர்காலத்தையும் தொற்றிப் பிடித்துப் பாதிக்கப்போகிறது. மனித வாழ்வின் முன்வினையாக நிலைகொண்டு தமிழ்ச் சந்ததியை சித்திரவதை செய்யப்போகிறது...!

இதேவேளை -

முல்லைத்தீவு மக்களின் அவலத்தின் மற்றொரு பக்கத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அறிக்கை படம் பிடித்துக்காட்டுகிறது.

மக்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் இப்போது குவிந்திருக்கும் புதுமாத்தளன் பகுதியில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் வசதிக்குறைவுகளையும் அந்த அறிக்கை வெளிப்படுத்தி இருக்கிறது.

மக்கள் உணவு, குடிதண்ணீர், பாதுகாப்புக் காரணங்களுக்காக கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். உண்பதற்கு ஏதாவது இருக்கிறதா என்று தேடுகின்றனர். தண்ணீருக்காக நீண்ட தூரம் நடந்துசெல்ல நேரிடுகிறது. போதிய சுத்தமான தண்ணீர் கிடைக்காமை இந்த மக்களுக்கு பெரும் பிரச்சினையாகி உள்ளது.

மரபுவழி மருத்துவ நிலையங்கள் எவையும் புதுமாத்தளன் பகுதியில் இயங்கவில்லை. சில ' தற்காலிக' வைத்தியசாலைகள் மட்டுமே உள்ளன. மோதல்களில் காயமடைந்தவர்கள் மற்றும் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பது என்பது 'மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது' போன்றதாக உள்ளது. இத்தகைய அவலத்திலும் அவஸ்தையிலும் வாழும் மக்களுக்கு அரசாங்கம் எந்தவிதத்தில் உதவப்போகின்றது? வெறும் அறிக்கைப் பிரசாரம் தமிழ்மக்களின் உயிர்வாழ்வைத் தக்கவைக்கும் தன்மையுடையதா?

போரைத் தொடர்வது குறித்தும் தனது இலக்கை அடைவது குறித்தும் அதிகமாகப் பேசிக்கொள்ளும் அரசாங்கம், முல்லைத்தீவு மக்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறை வேற்றுவதில் உண்மையான நாட்டம் காட்டுகிறதா?

தமிழ் மக்களின் நலனில் தனக்கு அக்கறை இருப்பதாகவும், அங்கு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கப்போவதாகவும் பிரசாரம் செய்யும் அரசாங்கம் -

வன்னி மக்களைச் செத்து மடிய அனுமதித்து விட்டு அவற்றை யாருக்குச் செய்யப்போகிறது? சுவர் இருந்தாலேயே சித்திரம் தீட்டலாம். உலக சுகாதார நிறுவனமும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் சுட்டிக்காட்டும் உடனடித் தேவைகளைச் செய்வதற்கேனும் அரசு முன்வருமா? உரிய வசதிகளை இப்போது செய்யாமல், மக்களை மறைமுகமாகச் சாகடித்துவிட்டு, எதிர்காலத்தில் அபிவிருத்தியும் ஜனநாயகமும் யாருக்காக?

# சுடர் ஒளி ஆசிரியரின் கைது; ஐ.தே.கட்சி கடும் கண்டனம்!

கொழும்பு, பெப்.28

'சுடர் ஒளி' பத்திரிகையின் ஆசிரியர் என். வித்தியாதரனின் கைது விடயத்தில் ஜனநாயகத்திற்கு எதிரான முறையில் அரசு நடந்துகொண்டமை கடுமையான கண்டனத்துக்குரியது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்றோ, பயங்கரவாதிகளுக்கு எவ்வாறேனும் உதவி செய்தார் என்றோ அரசு அறிந்திருந்தால் அவரை சட்டத்தின் முன் நிறுத்தியிருக்கலாம். அவரைக் கைது செய்து, விசாரணைகள் மேற்கொண்டு நீதிமன்றில் ஒப்படைப்பதற்குப் பல்வேறு விதிமுறைகள் உள்ளன.

அவ்வாறு சட்டரீதியாக செயற்பட்டிருந்தால் நாம் எவ்விதத்திலும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டோம்.

ஆயினும் அரசு செயற்பட்டது அவ்வாறன்று. வெள்ளை வானில் ஆயுததாரிகள் வந்து வித்தியாதரனைக் கடத்திச் சென்றிருக்கின்றனர். இது ஜனநாயகத்திற்கு முற்றிலும் எதிரானது.

இந்நிலையில் ஊடகவியல் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் தொடர்பில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வன்செயல்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் அபகீர்த்தியே கிடைத்துள்ளது. லஸந்த விக்கிரமதுங்க படுகொலை, உபாலி தென்னகோன் மீதான தாக்குதல் முதலான சம்பவங்களுடன் வித்தியாதரனும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றார்.

எவ்வாறேனும் இந்தக் கடத்தல் சம்பவத்தில் வித்தியாதரனின் உயிருக்கு ஏதேனும் ஆபத்துகள் ஏற்பட்டிருப்பின் சர்வதேச மட்டத்தில் இலங்கையின் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டிருக்கும்.

## வன்னியிலிருந்து பெற்றோர் குறித்த தகவல் கிடைக்காததால் பல்கலை. மாணவி தற்கொலை!

கொழும்பு, பெப். 28

கிழக்கு பல்கலைக்கழக முதலாம் வருட மாணவி ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

முல்லைத்தீவு நானாட்டானைச் சேர்ந்த தனபாலசிங்கம் நிருஜா என்பவரே அவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

''முல்லைத்தீவு மாவட்டத்திலேயே எனது அம்மா, அப்பா, சகோதரர்கள் உள்ளனர். அவர்களின் தொடர்பு எனக்கு கிடைக்கவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்றும் தெரியவில்லை.

அதனால்தான் நான் தற்கொலை செய்கிறேன்.'' என்று அந்த மாணவி எழுதிவைத்திருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் தொடர்பாக அவர் தொடர்ந்தும் சக நண்பர்களுக்குச் சொல்லி வந்தார் என்றும் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் கூறினர்.

# இலங்கையின் யுத்த நடவடிக்கைகள் குறித்து பிரான்ஸ் உன்னிப்பாக அவதானிக்கிறது

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்த நடவடிக்கைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி பேர்னாட் கொச்னர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மோதல்கள் இடம்பெற்று வரும் வலயங்களில் சிக்கியுள்ள சிவிலியன்களது நிலைவரம் குறித்து தமது அரசாங்கம் அதிக கரிசனை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த முன்நகர்வுகளின்போது சிவிலியன்களது பாதுகாப்பு எவ்வாறு உறுதிப்படுத்தப்படுகின்றது என்பது குறித்து பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர், ரோஹித்த போகொல்லாகமவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கைக்கு எவ்வாறான மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டும் என பிரான்ஸ் அமைச்சர் கேள்வி எழுப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சிவிலியன் பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து படைமுன் நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம, பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச படையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் மனிதாபிமான மீட்புப் பணிகள் திருப்தியளிப்பதாக பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டதாக அமைச்சர் போகொல்லாகம குறிப்பிட்டுள்ளார்.

### கிழக்குப் பல்கலை. விரிவுரைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

மட்டக்களப்பு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் விரிவுரைகள் நேற்று முதல் மறு அறிவித்தலை வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பத்மநாதன் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நிரூஜா எனும் மாணவி பல்கலையில் தற்கொலை செய்து கொண்டதையடுத்தே இப்பீடத்தின் விரிவுரைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

விசாரணையை மேற்கொண் டுள்ள மட்டக்களப்பு பொலிஸார் மாணவி தற்கொலை செய்து கொள்வதாக எழுதிய கடிதத்தை கண்டெடுத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர். (1-6)

# வாக்காளர் இடாப்புப் பிரதியை கிராம சேவையாளரிடம் பெறலாம்

## முதலாம் திகதி முதல் இந்த நடைமுறை

யாழ்ப்பாணம், பெப்.28

தேர்தல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற வாக்காளர் இடாப்புப் பதிவினைப் பெறுவதற்கு இனிமேல் யாழ்.தேர்தல் திணைக்களத்திற்கு வர வேண்டிய தேவை இல்லை என்று திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலை அனுமதி, தொழில்வாய்ப்புக்கள், பல்கலைக்கழக அனுமதிகள், பெயர் மாற்றம், நஷ்டஈடு போன்ற தேவைகளுக்காக ஆள்களின் வதிவிடத்தை நிரூபிப்பதற்காக வாக்காளர் இடாப்புப் பிரதிகளை பெறுவதற்கு மக்கள் யாழ்.தேர்தல் திணைக்களத்திற்கு வருகை தந்தனர்.

இதனால், திணைக்கள உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இத்தகைய நிலையினைக் கருத்திற்கொண்டு தேர்தல் திணைக்கள தலைமை அலுவலகத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளை முதலாம் திகதியிலிருந்து வாக்காளர் இடாப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் தத்தமது கிராம உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்து வாக்காளர் இடாப்புப் பிரதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

வாக்காளர் இடாப்பினைக் கோருகின்ற திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பதாரியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர்களின் விவரங்கள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

தேவையேற்படின் விண்ணப்பதாரியின் உண்மைத் தன்மையினை திணைக்கள தலைவர்கள் உறுதிப்படுத்த விரும்பின் தேர்தல் திணைக்களத்தால் வாக்காளர் இடாப்புப் புத்தகம் வழங்கப்படும் என்றார் அவர். (50- 9)

## கப்பல் கட்டணம் நாளை முதல் குறைப்பு

யாழ்ப்பாணம், பெப்.28

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பிரயாணிகள் கப்பல் சேவைக்கான கட்டணம் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 70 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஒரு வழிக்கு 3150 ரூபா கட்டணமாக அறவிடப்பட்டுவந்தது. இக்கட்டணம் நாளை முதல் 3080 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது என கப்பல் கம்பனி அறிவித்துள்ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார். (50-202)

## நாளை

| | |
|---|---|
| மாசி 17 | 01.03.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.இ. 05.00 வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | மு.இ. 9.40 வரை |
| சுபநேரம்: | 09.27 - 10.57 |
| ராகுகாலம்: | 04.57- 06.27 |

# நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் ஹரல்ட் அன்ரனி ஆண்டகை யாழ்.விஜயம்

## வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம் , பெப். 28

வடமராட்சியில் சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மக்களுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட 130 நிரந்தர வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் மார்ச் 4 ஆம் திகதி மு.ப. 10 மணியளவில் சக்கோட்டையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் ஆயர் மேதகு ஹரல்ட் அன்ரனி பெரேரா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்திரு. ஜோ. ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக் கலந்துகொள்ளவுள்ளனர்.

கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தால் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு கட்டுமாணப் பணிகள் நிறைவுபெற்றுள்ள 130 வீடுகளே இவ்வாறு கையளிக்கப்படவுள்ளன.

திக்கத்தில் 55 வீடுகளும் இன்பர் சிட்டியில் 45 வீடுகளும் சுப்பர்மடப் பகுதியில் 30 வீடுகளுமே இன்று கையளிக்கப்படவுள்ளன.

கடந்த வருடம் சக்கோட்டைப் பகுதியில் 57 வீடுகளும் தும்பளைப் பருத்தித்துறைப் பகுதியில் 90 வீடுகளும் கற்கோவளப் பகுதியில் 70 வீடுகளுமாக 217 நிரந்த வீடுகளை கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியின் விளிம்பில் நிற்கும் புலிகளுக்கு மீண்டும் பலம் கொடுக்க சர்வதேசம் கடும் முயற்சி

## அரசாங்கம் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு, பெப்.28

தோல்வியின் விளிம்பில் இருக்கும் புலிகளுக்கு மீண்டும் பலத்தைப் பெற்றுக்கொடுக்க பல சர்வதேச அமைப்புகள் முயற்சி செய்கின்றன என்று அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரிய தர்சன யாப்பா இப்படிக் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

புலிகள் இப்போது தோல்வியின் இறுதிக் கட்டத்தில் உள்ளனர். அவர்களை முற்றாக ஒழித்துக்கட்டும் வரை எமது படை நடவடிக்கை தடையின்றித் தொடரும்.

இடையில் புகுந்து யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு சிலர் அரசுக்குக் கொடுக்கும் அழுத்தத்தை நாம் கவனத்தில் எடுக்கமாட்டோம். எந்தவிதமான அழுத்தமும் எம்மிடம் எடுபடாது.

குறிப்பாக சில சர்வதேச அமைப்புகள் புலிகளுக்கு ஆதரவான வகையிலேயே செயற்படுகின்றன. புலிகளுக்கு மீண்டும் பலத்தைக் கொடுக்க இந்த அமைப்புகள் முயற்சி செய்கின்றனவோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இலங்கையின் நிலைமை மிகமோசமாகவுள்ளது என்று இந்த அமைப்புகள் சர்வதேச நாடுகளில் தெரிவிக்க முற்படுகின்றன. இருப்பினும், இந்த நாட்டின் உண்மை நிலை பற்றி இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவர். நாம் மக்களின் அரசியல் ஆணைப்படியே செயற்படுகின்றோம்.

நாங்கள் தமிழ் மக்களைப் புலிகளின் பிடியில் இருந்து மீட்கும் நடவடிக்கையைத்தான் இப்போது செய்துவருகிறோம். மீட்கப்பட்ட தமிழ் மக்கள் இப்போது வவுனியா அகதி முகாம்களில் அனைத்து வசதிகளுடனும் நிம்மதியாக வாழ்கின்றனர்.

இந்த மக்களுக்கான எமது மனிதாபிமான நடவடிக்கை தடையின்றித் தொடரும். எமது அமைச்சர்கள் பலர் இம்மக்களுக்கு உதவுவதற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்-என்றார். (அ-சி)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
இரத்தினம் விநாயகேஸ்வரன் (கிளி)

மண்ணில் முத்தாய் 04.10.1975
விண்ணில் வெள்ளியாய் 11.03.2008

*திதி: சதுர்த்தி*

உங்கள் அரவணைப்பில் வாழ்ந்தோமே தெய்வமே!
காலனுக்குப் பொறுக்காமல் செய்தானோ சதிவேலை
உங்கள் திருமுகத்தைக் காணத்துடியாய்த் துடித்திருந்து
வழி நடத்தக் கேட்கின்றோம். வந்திடுமோ அமைதி இனி?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.....

மீசாலை மேற்கு, மீசாலை.
மனைவி, பிள்ளைகள், உறவினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 . 08 . 1942



உதிர்வு 29 . 02 . 2008

### திருமதி நேசமலர் தேவராசா

(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

உயிர்தாங்கி இருந்தவுடல் – நோயின்
உணவாகிப் போனாலும் – நீ
உதிரம் தந்த எம்முடல்கள்
உயிர் வாழும்வரை வாழ்ந்திடுவாய்.....!!

5, புறூடி முன் ஒழுங்கை, கண்டி வீதி, அரியாலை.
நெகிழ்வுடன்: குடும்பத்தினர்.

## அதிபர்களுக்குக் கூட்டம்

கோப்பாய், பெப்.28

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

(202-72)

## விற்பனைக்கு

30 k.w. இங்கிலாந்து லிஸ்டர் ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு

தொடர்பு:- நல்லைக்குமரன்
இல:- 62/33, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர்க் காணிக்கை

எமது அமைச்சில் கடமையாற்றும் சோ.முரளிதாஸ் அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் கறுப்பன் சோலைமுத்து**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய அமைச்சு (வ.மா), திருகோணமலை.
ஈரவிழிகளுடன்: உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்



### திருமதி லோகேஸ்வரன் துஷ்யந்தி

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி லோகேஸ்வரன் துஷ்யந்தி 26.02.2009 வியாழக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னராசா(மக்கள் வங்கி உத்தியோகத்தர்) - புவனேஸ்வரியின் அன்பு மகளும் லோகேஸ்வரனின் அன்பு மனைவியும் சுபத்திரனின் (தரம் 3, பாமன்கடை இராமகிருஷ்ண வித்தியாலயம்) தாயாரும் சகுந்தவி, தர்சனன், ஜெனார்த்தனன், தமயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருணதாசன், ரேணுகா, கங்காதேவி, சிவகுமார் ஆகியோரின் மைத்துனியும் கஜானன், கானுஜன், பவிஞன் ஆகியோரின் பெரியம்மாவும் சின்னத்துரை, சின்னப்பிள்ளையின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(28.02.2009) சனிக்கிழமை காலை 6.30 மணி முதல் முற்பகல் 10.30 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கா வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
புவனேஸ்வரி(தாய்).

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள் - 2007

1. நுண்கலைமாணி முதலாம் வருடத் தேர்வு (நடனம்)
2. நுண்கலைமாணி இரண்டாம் வருடத் தேர்வு (இசை/நடனம்)
3. நுண்கலைமாணி மூன்றாம் வருடத் தேர்வு (இசை/நடனம்)
4. நுண்கலைமாணி நான்காம் வருடத் தேர்வு (இசை/நடனம்)

மேற்படி பரீட்சைகளை 11.03.2009 (புதன்கிழமை) தொடக்கம் 18.03.2009 (புதன்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| நுண்கலைமாணி முதலாம் வருடத் தேர்வு | 11.03.2009 - 14.03.2009 | 8.45 - 11.45 |
| நுண்கலைமாணி இரண்டாம் வருடத் தேர்வு | 16.03.2009 - 18.03.2009 | 8.45 - 11.45 |
| நுண்கலைமாணி மூன்றாம் வருடத் தேர்வு | 11.03.2009 - 14.03.2009 | 12.30 - 3.30 |
| நுண்கலைமாணி நான்காம் வருடத் தேர்வு | 16. 03.2009 - 17.03.2009 | 12.30 - 3.30 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 05.03.2009 (வியாழக் கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### செய்முறைப் பரீட்சை (இசை/நடனம்)

1. நுண்கலைமாணி 1 ஆம், 2ஆம், 3ஆம், 4 ஆம் வருடத்தேர்வு
2. கலை முதற் தேர்வு- 2006
3. பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி - I - 2005 & 2006
4. பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி - II - 2004 & 2005

மேற்படி கற்கை நெறிகளில் சங்கீதம் மற்றும் நடன அலகுகளுக்கான செய்முறைப் பரீட்சைகள் 19.03.2009 (வியாழக்கிழமை) தொடக்கம் இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டுஅறிந்து கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதில் பதிவாளர்.
27.02.2009

புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன

**CAD & BS**
(காலம்:- 6 மாதம்)
Diploma in Computer Aided Drafting and Building Studies

கட்டடத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்

கட்டடத் தொழில்நுட்பவியலாளர்கள், கட்டடத் தொழில்நுட்பமாணவர்கள் க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி. இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவோ அல்லது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவோ ஓர் சிறந்த அத்திவாரமாகும்.



Course Contents :
1. Building Technology
2. Construction Materials
3. Building Services
4. Building Drawings
5. Quantity Surveying
6. Basic Theory of Structures
7. Computer Aided Drafting

**CBM**
(காலம்:- 6 மாதம்)
Diploma in Contemporary Business Management

முகாமைத்துவத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.



இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நவீன முகாமைத்துவத்தின் எண்ணக்கருக்களையும், சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களையும் பயன்படுத்த தக்கவகையில் வடிவமைக்கப்பட்டதாகும். இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவும், வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றது.

Course Contents :
1. Management & Organizational Behaviour
2. Human Resource Management
3. Marketing Management
4. Financial Management
5. Business Communication
6. ICT For Managers

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: www.iiscitycampus.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உதயன் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற 'மோதல்கள் நடைபெறும் பகுதியில் ஊடகத்துறையின் செயற்பாடுகள்' என்னும் தலைப்பிலான விரிவுரையின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய ஆலோசகரும் சர்வதேச ஊடகத்துறை வல்லுநருமான கலாநிதி ஹென்றிக் குறாநெற் விரிவுரை நிகழ்த்துவதையும்படங்களில் காணலாம். (படங்கள்:நேசன்)

## கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.28

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடும் பற்றாக்குறையும் நிலவி வருகின்றன.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் தட்டுப்பாடான மருந்துகளைத் தனியார் மருந்தகங்களில் பணம் கொடுத்து பெற வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டின் ஏனைய பிரதேச அரசினர் வைத்தியசாலைகளில் சில முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-224)

## குறிப்பிட்ட இடங்களில் இன்று மின் தடை

யாழ்ப்பாணம்,பெப்.28

அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை குறிப்பிட்ட பிரதேசங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி,கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, யாழ்.நகர், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில் ஆகிய இடங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-224)

## இலவச வைத்திய சேவை

வடமராட்சி,பெப்.28

பருத்தித்துறை பிரதேச சபை, குடத்தனைப் பகுதியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடமாடும் இலவச ஆயுள்வேத வைத்திய சேவையை நடத்தவுள்ளது.

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை மண்டபத்தில் அன்றையதினம் காலை 9 மணி முதல் 11 மணிவரையும், பருத்தித்துறை பிரதேச சபை குடத்தனை உப அலுவலகத்தில் முற்பகல் 11 மணி முதல் பிற்கல் ஒரு மணிவரையும் இந்த நடமாடும் இலவச ஆயுள்வேத வைத்திய சேவை நடைபெறும்.

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி இலவச சித்த ஆயுள்வேத வைத்திய நிலைய சித்த ஆய்ுள்வேத வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி சச்சிதானந்தன் இந்த நடமாடும் சேவைகளில் சிகிச்சைகளை வழங்குவார். சிகிச்சையின்போது நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளும் வழங்கப்படும். (202-236)

## பார்வையற்றோருக்கு தேசிய சாகித்தியப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.28

பார்வையற்றோருக்கு தேசிய சாகித்தியப்போட்டி ஒன்றை நடத்துவதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

படைப்பாக்கப் போட்டியாக நடத்தப்படவுள்ளது கவிதை, சிறுகதை ஆகிய ஆக்கங்களை பிறைல் மொழி, அல்லது தமிழ் மொழியில் அனுப்ப முடியும்.

இப்போட்டியில் முதலாம் இடத்துக்கு 10 ஆயிரம் ரூபாவும், 2 ஆம் இடத்துக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், 3 ஆம் , 4ஆம், 5 ஆம் இடங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

போட்டி தொடர்பாக வலயக் கல்வி அலுவலகங்களிலுள்ள விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்களை ஈடுபடுத்தி எமது மகாணத்திலுள்ள பார்வையற்ற ஆக்கத்திறனுடையோரை போட்டிகளில் பங்குபற்ற ஊக்குவிக்குமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-267)

## கோப்பாய் பிரதேச குழுக் கூட்டங்கள்

கோப்பாய்,பெப்.28

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளன என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (202-72)




## உதைபந்தாட்டம்

கோப்பாய்,பெப்.28

வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புத்தூர் கலைமதி விளையாட்டுத்திடலில் இடம்பெறவுள்ளது.

ஆட்டத்தில் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (202-72)

## சகல கல்வி வலயங்களிலும் தொழில்நுட்ப வளவாளர் குழுக்கள்

வேலணை,பெப்.28

பாடசாலைகளின் கணனி தொழில்நுட்பத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு சகல கல்வி வலயங்களிலும் தகவல் தொழில்நுட்ப வளவாளர் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

வலயங்களின் கணனி இணைப்பாளர் தலைமையில் 15 பேர் கொண்ட குழுக்களாக இவை அமைக்கப்படவுள்ளன.

கணனி வன்பொருள் வளவாளர்கள், பயிற்றுநர்கள், மென்பொருள் வளவாளர்கள், பாடவிடயங்களைக் கணனி மயப்படுத்தும் ஆற்றலுடையோர் ஆகியோர் இணைக்கப்படவுள்ளனர் என வட மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் பி.செல்வின் இரேனியஸ் தெரிவித்தார். (202-267)

## மாணவர்களுக்கு உளவள ஆலோசனை வழங்க ஆசிரியர்கள் தயாராக இருக்க வேண்டும்

### மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

வேலணை,பெப்.28

இன்றைய சூழலில் மாணவர்கள் பல்வேறு உள, சமூகத் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். அவர்களை சீர்மியப்படுத்தும் சேவையை ஆசிரியர்கள் வழங்க வேண்டும். அதாவது மாணவர்களுக்கு வேண்டிய உளவள ஆலோசனைகளை வழங்க ஆசிரியர்கள் தயாராக இருக்க வேண்டும் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

உளவள சீர்மியப்படுத்தும் சேவைக்காக பாடசாலைகளில் ஒவ்வொரு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தீவகத்தில் வேலணை மத்திய கல்லூரி ஆசிரியை திருமதி ஆனந்தகௌரி குமாரதாசன், சுந்தரமூர்த்தி நாயனர் வித்தியாலய ஆசிரியை திருமதி சுபானுதா தவநாயகம் ஆகிய இருவரும் சிரேஷ்ட வளவாளர்களாக நியமிக்கப்பட்டு கற்பித்தல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என தீவக வலய உளவள ஆசிரிய ஆலோசகர் த.தர்மராஜா தெரிவித்தார். (202-267)

## ஒரு கிராமத்தின் வளர்ச்சி முன்னேற்றகரமாக அமைய கோயில், பாடசாலை மீது மக்கள் பற்றுக் கொள்ள வேண்டும்

### உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கந்தையா கருத்து

யாழ்ப்பாணம்,பெப்.28

ஒரு கிராமத்தின் வளர்ச்சிப் படிகள் முன்னேற்றகரமாக அமைய வேண்டுமானால் அங்குள்ள கோயில், பாடசாலை ஆகிய இரண்டின் மீதும் அப்பகுதி மக்கள் பற்றுள்ளவர்களாகத் திகழ வேண்டும்.

வலிகாம கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி வி.கந்தையா இவ்வாறு தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபர் த.தவராசா தலைமையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு கிராமத்தின் அதி உன்னத வளர்ச்சி அக்கிராமத்தில் உள்ள பாடசாலைகளின் வளர்ச்சியில்தான் தங்கியுள்ளது. இங்கு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளை பார்க்கின்றபோது உண்மையில் மகிழ்ச்சியடைந்தேன்.

பழைய மாணவர்கள், பெற்றோர்கள் இங்கு மிகவும் உற்சாகத்துடன் செயலாற்றுவதையும் விளையாட்டுப் போட்டிகள் சிறந்த முறையில் விரைவாகவும் ஒழுங்காகவும் நடந்து முடிந்துள்ளமைமையும் கண்டு இங்குள்ள மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டிய தேவை எனக்கு உள்ளது.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவான போதும் மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பத்தினரின் பிள்ளைகள் கல்வி கற்கின்றபோதும் கல்வியில் இந்தப் பாடசாலை உயர்நிலையில் உள்ளது.

இதற்குச் சான்றாக கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் வலிகாம கல்வி வலயத்தில் இந்தப் பாடசாலை மாணவி ஒருவர் 158 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் திகழ்ந்துள்ளார். பௌதீக வளங்கள் குறைவாக உள்ள போதும் ஆசிரியர்களுடைய அயராத முயற்சியினாலும், அர்ப்பணிப்பினாலும் இத்தகைய சாதனையை அந்த மாணவி புரிந்திருக்கிறார்-என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் திருமதி ஜெ.அருள்ராஜ் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

விளையாட்டுப் போட்டி மாணவர்களுடைய உடல், உள வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதொன்றாக அமைகிறது இன்றைய நிகழ்வில் நடந்த முடிந்த விளையாட்டுப் போட்டிகளை பார்க்கின்றபோது மிகவும் சந்தோசமாக இருந்தது. மாணர்கள் சுறுசுறுப்புடன் தமது விளையாட்டு நிகழ்வுகளை நடத்தியுள்ளனர்.

இந்தப் பாடசாலையின் அதிபர் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு முழுநேரமும் தன்னை அர்ப்பணித்துச் செயற்படுகின்றார். அவரின் முயற்சிக்கு நீங்கள் பக்கபலமாக நின்று செயற்படவேண்டும்-என்றார்.

பாடசாலை அதிபர் த.தவராசா தலைமயுரையில் கூறியதாவது:-

எமது பாடசாலையில் முன்னர் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி பயின்றுள்ளனர். அவர்கள் இன்று வைத்தியத்துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றனர்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு இந்தக்கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்-என்றார். (202-9)

## வலிகாமம் கிழக்கில் இம்முறை அதிகளவில் வெங்காயச் செய்கை

யாழ்ப்பாணம்,பெப்.28

வலி.கிழக்கு பிரதேசத்தில் இம்முறை அதிகளவான வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால் போன்ற பிரதேசத் தோட்டங்களில் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் சின்ன வெங்காயச் செய்கை நல்ல நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை, வெங்காயச் செய்கை அறுவடை ஆரம்பமாகியதை அடுத்து அதன் விலை என்றுமில்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் இவற்றைச் சந்தைப்படுத்த முடியாத அளவுக்கு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

சந்தைகளில் கிலோ 15 ரூபா முதல் 20 ரூபாவாக வெங்காயம் விற்கப்படுகின்றன. (202-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை நீட்டும் கரம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

இவர் படைக்கும் கோட்டுருவங்கள் ஒருவகை நீட்சியைக் காலும். வீச்சினால் எல்லை தாண்டிய இரேகைகள் இவருடையவை. ஒரு வகை நெகிழ்வை அல்லது தளர்வைத் தாங்கிப் பயணிப்பவை. இவற்றினூடு அவரது நீண்ட அனுபவத்தையும் கைத்தேர்ச்சியையும், அதற்கப்பால் அவர்தம் ஆத்ம பாவனையையும் காண்பியப்படுத்துபவை.

## ஆசை.இராசையாவின் ஓவியங்கள் பற்றிய பார்வை

வர்ணக்குழைவுகளால் மனதுக்குச் சுகமான சேர்க்கைகளை உருவாக்கி, ஒத்திசைவு காட்டி, உயிரனுபவந் தொனிக்கும் இழைமங்களைக் கட்டமைத்தலில் வேறு எவருக்கும் வசமாகாத வாலாயத்தை இவரிடத்தே காணலாம். மொத்தத்தில், இவருடைய படைப்புக்களினூடு இரேகைகள் மற்றும் வர்ணங்களின் மீதான, பித்துத்தனத்துக்கப்பால் ஒரு சித்தாட்டத்தை அனுபவிக்கலாம்.

வழிகாட்டுதல் என்பது வேறு, வாழ்ந்து காட்டுதல் என்பது வேறு. தான் விரும்பியவர்களுக்கும் தன்னை விரும்பியவர்களுக்கும் அப்பால் குழுமத்தின் அனைவருக்கும் நேர்நின்று வழிகாட்டுவதோடு, தனது நடையினூடு பாடங்கூறி வாழ்ந்துங் காட்டுவது அவரது பண்பின் பெருமை.

ஏனைய துறைகளோடு ஒப்பிடும்போது கலையைக் கற்பித்தலென்பது சிக்கலும், சவால்களும் நிறைந்த விடயமாகவே நோக்கப்படுகிறது. தனது படைப்பு அனுபவங்களையும், நுட்பங்களையும் மறைக்காது அள்ளி வழங்குவதிலும், கலையைக் கற்கும் மாணவனது உள்ளத்தில் ஆர்வத்தையும், தாகத்தையும் கிளர்த்தும் அசைவியக்கங்களிலும் படிப்பித்தலைக் கூடப்படைத்தலாகப் பார்க்கும் தன்மையிலும் அவரது கற்பித்தல் முறை (Way of teaching) வேறுபட்டு விளங்குகின்றது.

கலைக்கூடத்துள் நுழைந்துவிட்டால் தான் ஒரு படைப்பாளி என்ற தன்மையைக் களைந்துவிட்டு மாணவர்களோடு ஒன்றிவிடுவார். தன்னைக் கலைக்கூடத்தின் முதல் மாணவனாகச் சிருஷ்டித்துக் கொண்டு கலை விநோதங்களைக் கண்டுபிடிப்பதும், படைத்தலின்பால் மாணவர்களை ஒழுங்குபடுத்துவதும் கலையைக் கற்பித்தலில் அவருக்குரிய தனியடையாளங்கள். ஆர்வமுள்ள மாணவனுக்கு ஆசை.இராசையா அவர்கள் ஓர் அட்சயபாத்திரம்.

உலகாயுத வாழ்வியலின் உள்நுட்பங்களையும் ஊடாட்டத்தின் வழி உணர்ந்துகொண்ட உண்மைகளையும் இழையாகக் கொண்டு செய்யப்பட்ட அழகிய பின்னல் வேலை அவரது குடும்ப வாழ்வு. சிக்கனத்தின் வழியான செழுமை, செந்தண்மை, சத்தியம், அஞ்சாமை, தூய்மை, பகுத் தறிவுசிந்தை, நடப்பியல் யதார்த்தம் என்பவற்றைத் துணையாகக் கொண்டு செங்குத்தான பாதையில் நிகழும் பயணமாக அவரது வாழ்வு அமைகிறது.

இல்லறத்தின் இயங்கு நிலைகளிலுங் கூட தன்னுள் ஒரு துறவியின் பரிமாணத்தைக் கட்டமைத்துக் கொண்டிருக்கும் விதம் அவரது வாழ்வியல் தளத் தில் செம்மையைப் பறை சாற்றும்.

இவரது தனித்த வாழ்க்கையில், எரிமலையின் வெடிப்புக்களும், மணல்வீசி எறியும் புயற்காற்றில் பேரோசைகளும் அதிகம். வலிகளைத் தன்னுள்ளடக்கித் தனது தனித்த ஆத்மசாதனையினால் தன்னுள்ளே போர் நிகழ்த்துவதோடு வெற்றி அனுபவங்களையும் பெருக்குபவர்.

அடுத்தொரு பிறவி தனக்கிருந்தால் அங்குகூட கலைஞனாகவே பிறந்து, இந்தக் கணங்களின் நீட்சியைத் தொடர விரும்பும் அவரது ஆசை வியக்கத்தக்கது மட்டுமல்ல நயக்கத் தக்கதுங்கூட.

யாழ்ப்பாணத்து இயற்பண்புவாத ஓவிய மரபுக் கலைப் புலத்தில் ஆசை.இராசையா அவர்களின் மேதவிலாசம் சர்வ நிச்சயமானது.

சலசலப்புக்களேதுமின்றி நடப்பியல் வரம்புகளையுந் தாண்டி என்றைக்கும் ஒரே அதிர்வைக்காவி வந்து 'கண்ணுக்குள் வீசும் காற்றாக' ஆசை- இராசையா அவர்களை தரிசிக்கலாம். இந்தக் காற்று கலை கொண்டெழுந்து காலங்களையும் கடந்து வீசும்.

ஏசுகின்ற மனிதரிடை எறிகின்ற சூரியன்
காசினியில் எங்களுக்குக் கனந்தந்த பெருங்கலைஞன்
பேசரிய நதியாகிப் பிரவாகஞ் செய்கிறார்
வீசுபுகழ் ராசையா வித்தாரங் காண்.
நன்றி கலந்த வணக்கங்களுடன்.

(முற்றும்)

யோகி, மாணவன்,
சித்திரமும் வடிவமைப்பும் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# மண்ணூறும்

என்.சத்தியபாலன்

அயல்வீட்டின் 'பாட்டுப் பெட்டியிலிருந்து பலவித ஓசைகளோடு ஒலி பரப்பாகிக் கொண்டிருந்த அந்தப் 'பாடலை' க் கவனிக்க முனைந்தார் கார்த்திகேசு. தனது எழுபத்தாறு வயது அனுபவத்தில் இந்தவிதமான ஓர் ஓசைக் குழப்பத்தைப் பாடலென்று கேட்டதில்லையே என அவர் நினைத்தார். அவரது வீட்டிலிருக்கிற பழையகால ரேடியோவில் பெரும்பாலும் செய்திகளே ஒலிபரப்பாகும் (மீதி வேளைகளில் அதை யாரும் இயங்க அனுமதிப்பதில்லை). வெகு அரிதாக ஒரு வயலின் கச்சேரியோ மேளச்சமாவோ வீட்டில் அதை இயங்கவைக்கின்ற அவரது மருமகளோ, மகனோ சில சமயங்களில் அதிலும் இராப்பொழுதுகளில் கேட்பதுண்டு. தனியார் வானொலி நிலையங்கள் மலிந்துபோய் விட்ட இந்த நாள்களில் கைபேசிகளூடாகவோ, தொலைபேசிகளூடாகவோ தொடர்புகொண்டு பாட்டுக் கேட்கிற சந்தர்ப்பங்களில் வானொலி பட்டென மூடப்பட்டுவிடும். மிக ஆர்ப்பாட்டமான தாரை, தப்பட்டை முழக்கங்களோடு வந்தாலும் அதையெல்லாம் சகித்துக்கொண்டு அதையெல்லாம் அடுத்துவரும் செய்திகளுக்காகக் காத்திருக்கவேண்டியிருக்கிறது.

கார்த்திகேசு இருபது வயது இளைஞராக இருந்த காலத்தில் அவரது அக்கா வீட்டில்தான் முதன்முதலாக 'முலார்ட் ரக றுண்டிக்' ரேடியோ வாங்கப்பட்டது. அக்காவின் மகன்மார் மிகுந்த கலைப்பற்றுக் கொண்டவர்கள். பாடல் கேட்பது அவர்களுக்கெல்லாம் மாலை மூன்று மணிக்குப்பிறகு ஒரு மகிழ்ச்சியான அனுபவமாயிருந்தது. கார்த்திகேசுவுக்கு கண்டசாலாவின் பாடல்களில் ஒருமயக்கம் இருந்தது.

எம்.எஸ்.சுப்புலட்சுமியின் காற்றினிலே வரும் கீதத்தை மனங்கிறங்கிக் கேட்டிருந்த காலங்கள் இப்போதும் நினைப்பிலுண்டு அவருக்கு.

பின்பெல்லாம் அவர் சுருட்டுக்கட்டும் தொழிலில் இறங்கிய காலத்தில் புகையிலை முதலாளியின் வீட்டுக் 'கிராமபோன்' தியாகராஜபாகவதரையும் திருச்சி லோகநாதனை இல்லையெனாது வாரிவழங்கியதுண்டு.

அவருக்குத் திருமணமான புதிதில், எம்.எஸ்.ராஜேஸ்வரியின் 'மண்ணுக்கு மரம் பாரமா' பாடலைத் தனது புதுமனைவி மிகவும் ரசித்துக் கேட்பது கண்டு மிகுந்த கஷ்டப்பட்டுக் காசுமிச்சம் பிடித்து ஒரு 'நாஷனல்' ட்ரான்சிஸ்ரர் ரேடியோ வாங்கிக்கொண்டது இன்றைக்குப் போலிருக்கிறது. அவரது மனைவி மனோன்மணி இவரது ஐம்பதாவது வயதுக்குள்ளேயே இவரை விட்டுப் போய்விட்ட போதும்கூட அவளோடு வாழ்ந்த காலத்துல அனுபவங்களின் ஞாபகங்கள் அவரது நேரங்களை அர்த்தப்படுத்தியபடியிருக்கின்றன.

ஒரே ஒரு மகனைத் திருமணம் செய்துகொடுத்து அவனது குடும்பத்தோடு வாழும் இந்தக்காலம் மிகப் புதிரானதாய் வலி நிரம்பியதாய் இருப்பதுகண்டு அவர் திகைத்துப் போவார். செய்திகளும், பத்திரிகைப் புதினங்களும்கூட இரத்தக் கறையோடே நாளாந்தம் வருவதைக் கசிந்த கண்ணோடு பார்த்தபடியிருக்கிறார் அவர்.

# வாரவசந்தம்

## சுந்தரமூர்த்தி நாயனாரின் பாடல்களில் துலங்கும் ஆடற்கருத்துகள்

உமாமகேஸ்வரி

இறைவன் ஆடிய பல்வேறு கூத்துக்களிலே கொடுகொட்டியும் ஒன்று. இக்கூத்தினை இறைவன் திரிபுர தாண்டவத்தை ஆடியதைத் தொடர்ந்து கைகொட்டி ஆடியதாகப் புராணம் கூறுகின்றது. இதனையே சுந்தரர்

"....விட்டிசைப்பன கொக்கரைக் கொடு
கொட்டி தத்தளகம்
கொட்டில் பாடுமித் துந்துமியொடு
குடமுழா நீர் மகிழ்வீர்....." என்பதன் மூலம் கூறுகின்றார் போலும். இங்கு 'துந்துமி' என்னும் பதத்தைப் பார்த்தால் அதில் பொருள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. இது தற்காலத்தில் பயன்பாட்டில் உள்ள ஜதிச் சொற்கட்டிற்கான ஆதாரமாகக் கொள்ளலாம். தொடர்ந்து இக்கூத்தில் 'குடமுடிவு' பயன்படுத்தப்பட்டதாகவும் அறியப்படுகிறது. அத்துடன் அவர் சுடுகாட்டிலே பொடிபூசி நள்ளிருளில் உக்கிரமாக ஆடிய செய்திகளும் உண்டு.

காடு நல்லிடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றோ"
என்று திருக்குருகாவூர் நாதனைப் பாடிய பாடலில் காணலாம்.

சமகாலத்தில் இறைவனை ஆடி வழிபட்டதுடன் கலைப்பணியாற்றி வந்த ஆடல் நங்கையரைப் பற்றிய செய்திகள் பல காணக்கிடக்கின்றன. நாட்டின் எல்லாத் திசைகளிலுமிருந்தும் தம்மை இறைவனுக்கும், கோயிலுக்கும் அர்ப்பணித்த பலர் இங்கு ஆடிப் பாடிக் கலைப்பணியாற்றி வந்தனர். சுந்தரமூர்த்தி நாயனாரின் மனைவியர்களில் ஒருவரான பரவையார் உருத்திரகணிகையர் குலத்தைச் சேர்ந்தவர் என்பது உண்மையே. தேவரடியார்களில் உருத்திரகணிகையர் என்போர் இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்து மானிடன் ஒருவனை மணந்து பெரும்பாலும் சிவன் கோயிலிலே மாத்திரம் கலைப்பணியாற்றி வருபவர். இச்செய்திகளையெல்லாம் அடிகளின் பாடல்கள் பலவற்றிலே காணலாம். இங்கே சில

"மையார் தடங்கண்ணியர் ஆடும் துறையும்......."
".......பண்ணார் மொழிப்பாவையார் ஆடும் துறையும்....."
"......மடவார் நடமாடும்......."
"......கலவமயில் இயலவர்கள் நடமாடுஞ் செல்வக்கடல்நாகைக் காரோண மேவியிருந்தீரே...."
".......இழிந்திழிற் தருவிகள் கடம்புனல் ஈண்டி
எண்திசையோரும் ஆடவந்து இங்கே....."போன்ற
வரிகளிற் காணலாம்.

[தொடரும்..]

# யாருமே காணாத ஒரு துளி கண்ணீர்

பள்ளிக்கு தாமதமாக வருதல் கிராமப்புற பாடசாலைகளில் மிகவும் பெரியதொரு பிரச்சினை. அத்தகைய மாணவர்களுக்குரிய காரணமாக அவர்கள் வீட்டுப்பணிகள், தோட்ட வேலைகளில் பங்குபற்றுத் தேவைகளைக் குறிப்பிடலாம். இதற்காக மாணவர்களை தண்டிப்பது பொருத்தமற்றது என்பது முக்கிய அபிப்பிராயமாகும்.

பல மாணவர்களுக்கு அவர்கள் அதிகாலை எழுந்து தோட்டத்திற்கு போவதற்கு ஆலோசனை வழங்கி ஓரளவுக்கு வெற்றியும் கண்டிருந்தோம்.

ஆனால் சஞ்சீவனை, பலதடவைகள் குறிப்பிட்டும் அவன், காலை ஆராதனை, உடற்பயிற்சி முடிந்த பின்னர் பள்ளிக்கூடம் வருவான்.

(அண்மைச்செய்தி பாடசாலை வேற்று மொழியாம்)

அடித்தும் பிரயோசனம் இல்லை.

ஒருநாள் பள்ளியில் விஞ்ஞான ஆய்வு கூடத்தை துப்பரவாக்க எட்டாம் வகுப்ப மாணவர்களை ஈடுபடுத்தி இருந்தேன். அதில் சஞ்சீவனும் பங்குபற்றிக் கொண்டிருந்தான்.

கூப்பிட்டுக் கதைத்தேன்.

"ஏனப்ப லேற்றாக வாறனீர்"
"இனிமேல் வெள்ளென வருவேன் சேர்"
"டேய் நெடுகத்தானே சொல்லுறாய்"
தலையைக் குனிந்துகொண்டான்.
"தோட்டத்துக்குப் போறனீரோ"
"இல்லை சேர்"
"அப்ப..."
"பூ ஆயப்போறனான்"
"ஒவ்வொரு நாளுமோ"
"ஓம் சேர்"
"ஏன்ரா ஒவ்வொருநாளும் பூ"
"மாமாவுக்கு"
"ஏன் அவர் மாலை கட்டுறவரா"
"இல்லை பூசைக்கு"

மாமன்தான் அம்மன் கோயில் பூசாரி. இருந்திட்டு ஆயலாம். ஒவ்வொரு நாளும் ஏன் ஆய்வான். எனக்கு விளங்கவில்லை.

"ஏன் அப்பா"
"மாமா வீட்டைதான் நிண்டு படிக்கிறன்"
"பள்ளிக்குச் செல்லுதெண்டு சொல்லுமன்"
"இல்லை பேசுவார்"
"அம்மா, அப்பா எங்கே"

அவனின் பதிலில் இருந்து, அவன் தாய், தகப்பன் வேறு ஊரில் இருக்கினம். இவன் மாமன் வீட்டில் தங்கிப் படிக்கின்றான் என்பது புரிந்தது.

"அப்பா என்ன வேலை"
"தோட்டம்தான்"
"எத்தனை சகோதரம்"
"ஏழு"
"நீ எத்தனையாவது"
"மூத்தது"
"[illegible]"

தலையைக் குனிந்து கொண்டான். கஸ்ரம் போல்தான் இருந்தது.

இவனுடைய மாமனின் மகள் 9இல் படித்தாள். கூப்பிட்டுக் கேட்டேன்.

"அவைக்கு கஸ்ரம் சேர்"
"ஏன்"
"தகப்பன் விட்டுட்டுப் போட்டார்"
"விட்டுட்டு எங்கை போட்டார்"
"வேற கல்யாணம் கட்டிட்டார்"
"தாய் என்ன செய்யிறா"
"கடையிலை சமைக்கிறா"
"நீரும் பூ ஆயிறனீரோ"
"இல்லை"

பிறகு ஒருதடவை சஞ்சீவனின் 'சேட்பிக்கர்' விசயமாக தாய் பள்ளிக்கு வந்திருந்தார். மிகவும் வரட்சியான முகம்.

"சஞ்சீவனை உங்கடை வீட்டிற்கு கூட்டிப் போய் அங்கை படிப்பியுங்கோவன்"

சஞ்சீவனின் தாய் எதுவும் பேசவில்லை. போய் விட்டாள்.

சஞ்சீவன்-அந்தப் பள்ளியில் நான் படிப்பிக்கும் வரை தாமதமாகவே பள்ளிக்கு வந்துகொண்டிருந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் சேவைகள் அமைச்சின் கீழுள்ள உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய இயக்கம் 2007 - 2010 தேசிய வீட்டுத்தோட்டப் போட்டியை அண்மையில் நடத்தியது.

இப்போட்டி 'பயிர் செய்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்' என்னும் தலைப்பில் நடத்தப்பட்டது.

பாடசாலை தோட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் தோட்டத்தையும் பாடசாலை மாணவர் மட்டத்தில் இடம்பெற்ற வீட்டுத்தோட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்ற மாணவி எஸ்.சுலோசனாவின் தோட்டத்தையும் முதலிரு படங்களிலும் காணலாம்.

அலுவலகத் தோட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற சண்டிலிப்பாய் பிரதேச செயலகத் தோட்டத்தை மூன்றாவது படத்தில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# மக்கள் வங்கியின் தந்தை என்று ஐக்கிய நாணய சங்கத்தைக் கூறலாம்

## கிளை முகாமையாளர் எம்.என்.இராசதுரை கருத்து

யாழ்ப்பாணம்,பெப்.28

ஐக்கிய நாணய சங்கங்கள் முன்னர் மக்களின் தேவைகளை அறிந்து பல்வேறு வழிகளில் சேவை புரிந்துள்ளன. அது மக்கள் வங்கியின் தந்தையெனக் குறிப்பிட்டால் மிகையாகாது.

யாழ்.கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளர் எம்.என்.இராசதுரை இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட சிக்கனக்கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை அண்மையில் கௌரவித்தது. இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

முன்னர் ஐக்கிய நாணய சங்கங்கள் மக்களின் தேவைகளை உணர்ந்து மகத்தான சேவைகளைப் புரிந்து வந்துள்ளன.

மக்கள் வங்கி உருவாகுவதற்கு முன்னர் ஐக்கிய நாணய சங்கங்கள் கூட்டுறவு அடிப்படையில் வங்கிகள் அமைத்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். மக்கள் வங்கி தோன்றிய பொழுது ஐக்கிய நாணய சங்கங்களுக்கு உதவிய கூட்டுறவு வங்கிகள் செயலிழக்கப்பட்டன.

அண்மையில் வெளிவந்த மத்திய வங்கியின் புள்ளிவிவரங்களின்படி, யுத்த சூழலால் பாதிக்கப்பட்டு பல இன்னல்களை எதிர்கொண்டபொழுதும் எமது பிரதேசம் முதலிடம் பெற்றுள்ளது - என்றார்.

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைதல் பெரிய தடை தாண்டல் போல் கணிக்கப்படுகிறது. சித்தியடைந்தோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வுகள் பலராலும் நடத்தப்பட்டு வருகின்றன - என்றார்.

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் காரியாலயத்தின் தலைவர் சு.சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 61 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (202-9)

# பேச்சுத்திறன் காண் வைபவம் இன்று

நல்லூர்,பெப்.28

யாழ்ப்பாணம் பாலர் கல்விக் கழகத்தின் திருநெல்வேலி ஞானக்குழந்தைகள் இல்லப் பாலகர்கள் பங்குகொள்ளும் பேச்சுத்திறன் காணும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.(202-111)

# இலங்கைக்கு மருத்துவக் குழுக்களை அனுப்ப இந்தியா முடிவு என்கிறார் விஷ்ணு பிரகாஷ்

கொழும்பு,பெப்.28

இலங்கையில் போரினால் காயமடைந்த பொதுமக்களுக்கு உதவ, மருத்துவக் குழுக்களையும், தேவையான மருந்து மற்றும் உபகரணங்களையும் உடனடியாக அனுப்ப இந்தியா முடிவு செய்துள்ளது.

இந்திய வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் விஷ்ணுபிரகாஷ் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இத் தகவலைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இலங்கையின் வடக்கே போர் பகுதியில் சிக்கிக்கொண்டிருக்கும் பொதுமக்களை மீட்டு, பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுவரும் நடைமுறைகளுக்கும் உதவத் தயாராக இருப்பதாக இந்தியா ஏற்கனவே விருப்பம் தெரிவித்திருந்தது.

அவர்களுக்குத் தேவையான மனிதாபிமான மற்றும் மருத்துவத் தேவைகளை நிறைவேற்றத் தயாராக இருப்பதாகவும் இந்தியா கூறியிருந்தது. அதுதொடர்பான நடைமுறைகள் குறித்து இலங்கை அரசுடன் விவாதிக்கப்பட்டது.

பொதுமக்களின் அவசர மருத்துவத் தேவைகளை நிறைவேற்ற இரு நாட்டு அரசுகளும் இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்தியா உடனடியாக அவசரகால மருத்துவக் குழுவை இலங்கைக்கு அனுப்ப உள்ளது. அந்த மருத்துவக் குழுவில், மருத்துவர்கள், அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், மயக்க மருந்து நிபுணர்கள், செவிலியர்கள் மற்றும் துணைப் பணியாளர்கள் இடம்பெற்றிருப்பார்கள்.

அத்துடன், தேவையான மருத்துவ உபகரணங்களும், மருந்துகளும் இருக்கும். தேவையைப் பொறுத்து, அது மேலும் அதிகரிக்கப்படும்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மறுவாழ்வு மற்றும் மறுகட்டமைப்பு நடவடிக்கைகளிலும் இலங்கை அரசுடன் இந்தியா இணைந்து செயற்படும் - என்றார். (சி)

# நிர்வாகிகள் தெரிவு

வல்வை ஒன்றியத்தின் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தலைவராக மு.தங்கவேலும், செயலாளராக பூ.அகமணிதேவரும், பொருளாளராக இ.யோகச்சந்திரனும் தெரிவாகியுள்ளனர்.

* * *

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் புதிய தலைவராக ப.பாலேந்திராவும், செயலாளராக வ.இரவிச்சந்திரனும், பொருளாளராக ந.சிவபாலனும் தெரிவுசெய்யப்பட்டனர். (202-207)

* * *

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன கடன் நிவர்த்திச் சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தலைவராக செ.பேரின்பநாதனும், செயலாளராக சி.பாக்கியலிங்கமும், பொருளாளராக க.பாலகணேஸும் தெரிவுசெய்யப்பட்டனர். (202-78)

* * *

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்களாக கல்லூரி அதிபர் வி.மாணிக்கம், டாக்டர் அ.யோகராசா ஆகியோரும் தலைவராக வி.கே.கணபதிப்பிள்ளையும், செயலாளராக சி.சிவதாசனும், பொருளாளராக ஏ.ஜெயக்குமாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (202)

# தவக்காலச் சிந்தனை



## பிரதியுபகாரம் கருதாது உதவிடுவோம்

எமது அன்றாட வாழ்வில் பலவித உதவிகளைப் பெறுகின்றோம். அதனை நாமும் செய்கின்றோம். இவ்வுதவிகள் எந்த நேரத்தில், எந்த நோக்கில் அமைகின்றன? சில உதவிகள் எமக்கு வேண்டியவர்கள், உறவினர்கள் என்ற ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில உதவிகள் பெயர், புகழ், தலைமைத்துவம் என்பனவற்றை நிலைநிறுத்தும் நோக்கில் இடம்பெறுகின்றன. பிரதியுபகாரத்தை எதிர்பார்த்துச் செய்யும் உதவிகளும் உள்ளன. உதவி செய்வதாகக் கூறி உபத்திரவம் கொடுப்பவர்களும் உண்டு. பிறரன்போடு செய்யும் சேவை உள்ளங்களும் இல்லாமலில்லை. இவற்றுள் நாம் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்? சுமையைக் குறைக்கும் சுமைதாங்கிகளா? கழுத்தை நெரிக்கும் நுகத்தடிகளா? மேலே செல்ல உதவும் ஏணியைத் தூக்கி எறிபவர்களா? சிந்திப்போம்.

வாழ்வின் சுமைகளாலும், இயற்கையின் சீற்றங்களாலும், அடக்குமுறை, வறுமை, போரின் தாக்கங்கள் போன்றவற்றாலும் நொந்துபோன பல்லாயிரம் மக்கள் உதவிகளை எதிர்பார்த்து எம் அயலிலும் சமூகத்திலும் வாழ்கின்றார்கள். தமது உள்ளச் சுமைகளைப் பகிர்ந்துகொள்ள சந்தர்ப்பம் இன்றி மௌனித்துள்ளார்கள். அன்பின்றி, ஆதரவின்று கைவிடப்பட்ட நிலையில் வாழ்வோர் எம்மிடையே அநேகர் உளர். எனவே சீமோனைப் போல, நல்ல சமாரியன் போல உதவமுன்வருவோம். எம்மை அன்பு செய்வோருக்கு மட்டுமன்றி பகைவருக்கும், முகவரி தெரியாதோருக்கும், புறவினத்தாருக்கும் பலனை எதிர்பாராது பணி புரிவோம். உறவுகளைப் பலப்படுத்துவோம். தகுந்த சன்மானத்தை இறைவன் எமக்களிப்பார்.

யாரோ செய்த ஆடை எம் மானத்தைக் காக்கின்றது. விவசாயிகளின் வியர்வையில் விளைந்த நெல்மணிகள் உணவாகின்றன. அதேபோன்று நாம் செய்யும் உதவிகளின் பலனை இன்னொருவர் வழியாக இறைவன் எமக்கருளுவார் என நம்புவோம்.

எஸ்.யோசுதாஸ், கொழும்புத்துறை.

# வாசகர் திருமுகம்

## ஓய்வூதியர்களுக்கு உல்லாச விடுதி தேவையா?

ஓய்வூதியர்களின் சம்பளத்தில் 50 ரூபா கழிக்கப்படவேண்டும் என ஓய்வூதியப் பணிப்பாளரின் சார்பாகக் கடந்த 26.01.2009ஆம் திகதி வெளியிடப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பணம் நுவரெலியா மாவட்டத்தில் றம்போட என்னும் இடத்தில் ஓய்வூதியர்களுக்கு உல்லாச விடுதி ஒன்று அமைப்பதற்காகவே கழிக்கப்படவுள்ளதாம்.

சகல ஓய்வூதியர்களின் பங்களிப்பும் கட்டாயம் இருக்கவேண்டும்.

இந்த விடுதி கட்டுவது யார்? ஓய்வூதியச் சங்கமா? அல்லது அரசா? எனத் தெரியாததால் பாரிய குழப்பமாகவுள்ளது. யாராக இருந்தாலும் ஓய்வூதியர்களின் சம்மதம் ஓய்வூதியச் சங்கங்கள் மூலமாகக் கேட்கப்பட்டிருக்கவேண்டும்.

சம்பள உயர்வு என்று வரும்போது சேவையில் இருப்பவர்களுக்கு ஒருதொகை - அதில் 50 வீதம் ஓய்வூதியர்களுக்குக் கிடைக்கும். இது அநீதியாகத் தெரியவில்லை. இதனால் விளக்கமாக எழுதவேண்டிய தேவை எனக்கு இல்லை. இருந்தாலும் சுட்டிக் காட்டவேண்டிய நிலை!

ஆகவே நாம் இருக்கும் நிலையில் உல்லாச விடுதி தேவையில்லை எனக் கருதுகிறேன்.

*யாழ்ப்பாணம்.* ஓய்வூதியர்.

## ஆடம்பரங்கள் அவசியமா?

வன்னியிலே சிக்குண்டுள்ள லட்சக்கணக்கான மக்களுக்காக - தமிழ் நாட்டிலும் வெளிநாடுகளிலும் தீமூட்டி உயிர் நீத்துள்ளார்கள். உண்ணாவிரதம் இருந்து உணர்வுகளைக் காட்டுகிறார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் அனைவருமே வேதனையில் துடித்து உணர்வுகளை வெளிக்காட்டி வருகின்றனர். ஆனால்.... இங்கு.... யாழ்ப்பாணத்தில் நாம் என்ன செய்கிறோம். பூப்புனித நீராட்டு விழா, திருமணவிழா என்பன நடைபெறத்தான் வேண்டும். ஆனால் இவ்வைபவங்களில் காலை 5 மணி தொடக்கம் இரவு 11 மணிவரை "தொம் தொம்" என்று பெரிய சத்தமாக பாட்டுப் போடுவதும் ஆடுவதும் தேவை தானா? கொஞ்சம்கூடச் சிந்திக்காமல் இப்படி தலைகீழாக நாம் நடக்கலாமா? இது மட்டுமா? 'கீ பேர்த் டே" கூடப் பெரிதாகக் கொண்டாடப்படுகிறது. இப்படி [illegible]ப்பது கடவுளுக்கே பிடிக்குமா? இதுதான் இவ்வளவு அலைச்சலும் [illegible] எல்லோரும் இதனை உணர்ந்து வாழ்வார்களாக.

*சுன்னாகம்.* ப.விமலேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக சாலை



நினைவு வெளியீடுகள் இன்று மிகக் காத்திரமான ஆவணங்களாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. உலகை விட்டுப் பிரிந்த ஒருவரின் நினைவுகள் பிரியாத வகையில் நின்று நிலைக்கக்கூடிய வகையில் பல படைப்புகளைத் தாங்கிய தொகுப்புகளாக வெளிவந்துகொண்டிருக்கின்றன நினைவு மலர்கள்.

அந்த வகையில் தொண்டைமானாறு மயிலன், சின்னத்தம்பி என்பவரின் நினைவாக வெளியிடப்பட்டுள்ளது. 'கிராமத்து வாசம்' க.வேந்தனார் தொடக்கம் மு.பொன்னம்பலம் வரை 16 கவிஞர்கள் படைத்த 21 குழந்தைப் பாடல்களின் தொகுப்பாக இது அமைந்துள்ளது. இதில் இடம்பிடித்துள்ள கவிதைகள் யாவற்றிலும் கிராமத்து மண்ணினதும் கிராமத்து வாழவினதும் வாசனை கமழ்கின்றது. அனைத்துப் பாடல்களும் ஏற்கனவே அச்சு ஊடகங்களில் வெளிவந்தவையே.

★ ★ ★ ★ ★




வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் தயாரித்து வழங்கும் 'மாருதம்' , சமூக, கல்வி, கலை, இலக்கிய சஞ்சிகையாக வெளிவருகின்றது.

பல்வேறு இலக்கியவாதிகள் குறித்த விமர்சனங்களுடன் புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் ஆக்கங்களைத் தாங்கியதாக இச் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இச் சஞ்சிகையில் ஒரு சிறப்பம்சம் சுட்டிக்காட்டத்தக்கது.

இலக்கிய வளர்ச்சியை நோக்காகக்கொண்டு ஈழத்தில் வெளியான சஞ்சிகைகள், நூல்கள், இறுவட்டுகள் என்பவற்றின் அட்டைப் படங்களை இது சுமந்துள்ளது.

கவிதைகள், சிறுகதை, நேர்காணல், விமர்சனம்,இலக்கிய நயம் ஆய்வுகள் என்பவற்றுடன் நண்பர்கள் வட்டத்தின் பதிவுகளும் இச்சஞ்சிகையில் இடம்பிடித்துள்ளன.

★ ★ ★ ★ ★



வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியில் உயர்தரம் கற்கும் மாணவனும் பருத்தித்துறை தும்பளைக் கிராமத்தைச் சேர்ந்தவருமான க.சுதர்சனின் கன்னி முயற்சியாக வெளிவந்துள்ளது 'மௌனமே வாழ்வாக' எனும் கவிதைத் தொகுப்பு நூல். கல்லூரியில் வெளியிடப்படுகின்ற சஞ்சிகைகளில் இவரது கவிதைகள் இடம் பிடித்துள்ளன. அதனையே இங்கு தொகுத்திருக்கிறார்.

எமது இன்றைய இறுக்கமான வாழ்வியலை தனது புதுக் கவிதையில் நெருக்கமாகப் பயன்படுத்தியிருக்கிறார். கவிதை உலகிற்கு மெல்ல மெல்ல தடம்எடுத்து வைத்திருக்கிறார் என்று சொல்வதைவிட கவிதை உலகத்தை இப்போதுதான் எட்டிப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார் என்று சொல்வது சாலப் பொருத்தமாகும். 'மௌனமே வாழ்வாக....' இளங்கவிஞன் க.சுதர்சனின் படிக்கட்டாக அவர் மென்மேலும் கவிப்படிக்கட்டுகளை அடுக்கிக்கொள்ள வேண்டுமானால் இன்னும் நிறைய வாசிக்கவேண்டும்.

## கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.28

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும்நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(204)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்றுகேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ நாகலிங்கம் ஸ்டோர்ஸ்
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

TRINITY COLLEGE & UNIVERSITY
COORDINATING OFFICE
MANIPAY

B.Sc in (Computer Science)

பட்டப்படிப்புக்கள் 28/02/2009 (இன்று) புதிய பிரிவுகள் (Batch - 01) ஆரம்பமாகின்றன.

வெகுவிரைவில் Batch - 02 ஆரம்பமாகவுள்ளதால் அதற்கான விண்ணப்ப படிவங்களை எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக்கொள்ளமுடியும்.

எமது இப்பட்டப்படிப்பினை நீங்கள் நிறைவு செய்த பின்னர் M.Sc in IT பட்டப்படிப்பினை UK,USA,CANADA,INDIA அகிய நாடுகளில் உள்ள பல்கலைகழகங்களுக்கு விண்ணப்பித்து இலகுவாக Visa அனுமதி பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மகழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் எமது இப்பட்டப்படிப்பினை நீங்கள் நிறைவு செய்த பின்னர் தற்போது Association of computer Professional (U.K) சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொள்ள முடியும்.

UNI TECHNOLOGY
Degree Division
MANIPAY
T.P :- 060 - 221 - 6433

## யாழ்.மத்திய கல்லூரி விஞ்ஞானத்துறை ஆசானும் விளையாட்டுத்துறை முதல்வருமான

# திரு.V.S.மகேந்திரன் அவர்களின் சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ்

### புன்னகை பூத்த விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்



எமது கல்லூரியில் கணித, பௌதிக ஆசிரியப் பணியைத் தொடங்கி பன்னிரண்டு ஆண்டுகள் விளையாட்டுத் துறையைப் பொறுப்பெடுத்து சிறப்பாகச் செயற்பட்டு, கல்லூரி விளையாட்டுத் துறையின் கீர்த்திக்கும், பெருமைக்கும் காரணமாக விளங்கிய திரு.V.S. மகேந்திரன் அவர்கள் ஓய்வுபெற்று நவீல்ட் பாடசாலையில் அதிபர் பொறுப்பை ஏற்று சேவையாற்ற உள்ளதைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

எல்.ஓங்காரமூர்த்தி
அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

### விளையாட்டுத்துறைக்கு கீர்த்தி சேர்த்தவர்



மத்திய அன்னையின் புகழ்பூத்த விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் வரிசையில் Tonny Abraham, V.T.Jeyaratnasingham, Thambiah Selvarajah போன்ற மத்தியின் மைந்தர்கள் வரிசையில் 17 ஆண்டு காலம் சேவையாற்றிய எமது கல்லூரி அன்னையின் ஆசிரியரும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியருமாகிய மதிப்புக்குரிய திரு.V.S.மகேந்திரனும் முக்கிய இடம் பெறுகின்றார். புன்னகையுடன் மைதானத்தை அலங்கரித்த பொறுப்பாசிரியர் என்றால் மிகையாகாது. கல்வியைப் போன்று விளையாட்டுத் துறையிலும் ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்கிய பெருந்தகை. பலபல துறைகளில் இவரது மாணவச் செல்வங்கள் நல்ல நிலை பதவி வகித்தல் இவரது செயற்பாட்டின் அளவுகோல். எமது கல்லூரி சேவையினின்று ஓய்வு பெற்றாலும் இவரது எதிர்கால சேவை, இறைவனுக்கு நன்றி செலுத்தும் சேவையாக அமைகின்றது. இந்த மாணவச் செல்வங்களை வல்லுனர்களாகவும் உருவாக்கி, தளர்வற்ற தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்றி அமைத்தல் போற்றுவதற்குரிய பணியாக அமைகின்றது. வளமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

இ.இராசாராம் (J.P, தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)



**திரு.V.S.மகேந்திரன் B.Sc.**
**(P.G.DE, S.L.T.S-I**
**Black Belt 4 th DAN)**

பிறந்த திகதி: 11.08.1958

ஆரம்பக்கல்வி:
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

உயர் கல்வி: யூனியன் கல்லூரி

பட்டப்படிப்பு:
யாழ்.பல்கலைக்கழகம்
1980-1983

பட்டபின் கல்வி டிப்ளோமா
தேசிய கல்வி நிறுவகம்
1995-1996

**சேவை விவரம்**

10.12.1986 - 13.01.1992
தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

14.01.1992 - இன்றுவரை
யாழ்.மத்திய கல்லூரி

### பின்நெறிப் புலமையாளர்



பல பெரியோர்களது ஆசீர்வாதம் பெற்ற தேசியப் பாடசாலையான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 17 ஆண்டுகளாக ஆசிரியத்துவத்தினை நேர்மையாகவும் விசுவாசமுடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றிய திரு.V.S. மகேந்திரன் ஆசிரியர்கள் அவர்கள் இன்றுடன் (28.02.2009) எமது பாடசாலையில் இருந்து ஓய்வுபெற்று கைதடி நவீல்ட் பாடசாலை முதல்வராகப் பதவி ஏற்றுச்செல்கின்றார். காலமாற்றத்திற்கு ஏற்றவாறு தேவைகளும் மாறுகின்றன. மாற்றங்களின் வழியாகவே அபிவிருத்தியும் ஏற்படுகின்றது. ( Development is a Process of Change) என்பதனை இது நினைவுபடுத்துகின்றது.

இவர் விளையாட்டுத்துறை முதல்வராக இருந்து கிடைக்கக்கூடிய வளங்களை உச்சமாகப் பயன்படுத்தித் தேவைகளை இனம்கண்டு அபிவிருத்தி செய்த பின்நெறிப்புலமையாளர். இவர் நீண்டகால சிந்தனையுடன் சிறப்பாக செயற்படக்கூடிய ஆற்றல் கொண்ட ஆளுமை மிக்கவர்.

இவருடைய எதிர்காலம் ஒளிமயமாகவும் சிறப்பாகவும் விளங்க எமது ஆசிரியர் சார்பாக வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்.

திரு.பா.உதயசேகர் (தலைவர்,ஆசிரியர் வட்டம்)
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### சிறந்த வழிகாட்டி



எங்கள் ஆசான் V.S. மகேந்திரன் அவர்களை நான் சிறுவயதிலிருந்தே அறிவேன். மாணவர்களிடம் அன்பாகவும் பண்பாகவும் பழகும் திறன் கொண்டவர். பௌதிகவியலைப் பதமாக எடுத்துரைக்கும் ஆற்றல் அவரின் தனிச்சிறப்பு. கராத்தை கலை நிபுணராக இருந்த இவர் பல மாணவருக்கு கராத்தைக் கலையை பயிற்றுவித்துள்ளார். துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் என்பவற்றில் நானும் என் போன்ற சக மாணவர்களும் ஈட்டிய சாதனைகளுக்கும் இன்று ஒரு மாணவ முதல்வராகவும் துடுப்பாட்ட அணித் தலைவராகவும் நான் விளங்குவதற்கு இவரே வழிகாட்டியாவார். மாற்று வலுவுடையோருக்கு ஆதரவளிக் கும் நவீல்ட் பாடசாலை அதிபராக பதவி ஏற்று சிலரின் சேவையால் அப்பாடசாலை மேலோங்கி வளரவும் எல்லா வளங்களையும் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

செல்வன் எஸ்.ஷெல்டன், மாணவ முதல்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, இணுவில் மக்லியோட் வைத்தியசாலை ஆகியவற்றின் மருத்துவசேவையை நினைவுகூரும் வகையில் இணுவில் தென்னிந்தியத் திருச்சபை ஆலயத்தில் வைத்தியசாலை ஞாயிறு வழிபாடு அண்மையில் நடைபெற்றது. இதில் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதி வண கலாநிதி டானியேல் எஸ்.தியாக ராஜாவும் இரு வைத்தியசாலைகளின் உத்தியோகத்தர்கள், தாதிமார் ஆகியோரும் வழிபாடு செய்கின்றனர்.



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் கொண்டாடிய தைப்பூச விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் தமிழறிஞர் கே.வி.குணசேகரம் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். அருகில் இந்து விவகார அபிவிருத்தி உதவியாளர் திருமதி.மகிந்தினி விஜயகுமார், சொற்பொழிவாளர் கனகவாரிதி வி.கனகராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவுத் தொண்டர்கள் நீர்வேலி போயிட்டி வினோபாஜி சனசமூக நிலையத்தின் பொதுமக்களுக்கான குடிதண்ணீர் கிணற்றை இறைத்துச் சுத்தம் செய்வதைப் படத்தில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)



பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய கால்கோள் விழாவில் அதிபர் அ.சா. அரியகுமார் தலைமையுரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறைக் கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன், உப அதிபர் எஸ். சிவலிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (படம்: கர்ணன்)




கோப்பாய்ப் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் நடைபெற்ற சிறந்த பண்ணையாளர் தெரிவுப்போட்டியில் வெற்றிபெற்ற பண்ணையாளர்களைப் பாராட்டி பரிசில் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்கள யாழ்.மாவட்ட பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் பண்ணையாளர் ஒருவருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். சிரேஷ்ட கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் எஸ்.சத்திய வாகீஸ்வரனும் காணப்படுகின்றார். (படம்: அச்சுவேலி செய்தியாளர்)



சுன்னாகம் தெற்கு கிராம சேவகராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்ற செ.வைத்தியநாதனைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் நடைபெற்றது. நிகழ்வில் விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.தியாகலிங்கம் உரையாற்றுவதையும் கதிரமலைச் சிவன் ஆலயப் பிரதம குரு நா.சர்வேஸ்வரக்குருக்கள், விழா நாயகன், அவரது பாரியார், மகளிர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத் தலைவி திருமதி வி.ஜெயராஜா ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: குமரன்)



பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கத்தில் 35 வருடம் அருஞ்சேவையாற்றிய நான்கு பணியாளர்கள் சிக்கனச் சேமிப்புக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் இ.சுப்பிரமணியம், ந.கிருஸ்ணமூர்த்தி, இ.நாகராசா, த. பூலோகராசா, இ.அம்பலவாணர், செல்வி க.இளமதி, பிரதேச செயலர் (உதவி) திருமதி எ.அ.யோகநாயகம் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (95)



புத்தூர் மேற்கு கலைமதி பாலர் முன்பள்ளி சிறுவர் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் எஸ்.யோகராசா வங்கியின் சார்பில் பரிசில் வழங்கிக் கௌரவிக்கின்றார். வங்கி உத்தியோகத்தர் எஸ். சுகந்தன் மற்றும் பாலர் முன்பள்ளி ஆசிரியைகளும் படத்தில் காணப்படுகின்றனர். (அச்சுவேலி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்படவுள்ளன

குடாநாட்டில் உள்ள 13 பாடசாலைகளுக்கு யாழ்.கல்வி வலயத்தால் கணனிகள் வழங்கப்படவுள்ளன.

குடாநாட்டுப் பாடசாலைகளுக்கென 700 கணனிகள் மற்றும் அதற்கான தளபாட வசதிகளைக் கல்வி அமைச்சு அனுப்பி வைத்துள்ளது. இந்தக் கணனிகள் மற்றும் தளபாடங்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன.

இந்தக் கணனிகளை மேற்படி 13 பாடசாலைகளுக்கும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (202-224)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் 03 . 10 . 1936



விண் 16 . 02 . 2002

மனைத்தக்க மாண்புடையாள்

**திருமதி மாணிக்கம் மாங்கம்**

திதி: மாசி பூர்வபக்க சதுர்த்தி

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன?
அம்மா என்றழைக்க ஆளில்லையே?
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் அம்மா!
எல்லாம் வல்ல வேதவன விநாயகனே!
நல்ல பிறவி கொடுத்தருள வேண்டுமென்று
மனதுருகி மன்றாடிக் கரம் கூப்பி வணங்கி நிற்கும்

*நிரந்தர முகவரி:*
இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரி.
*தற்காலிக முகவரி:*
இருபாலை வீதி, கோண்டாவில். (83020)

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சி.மாணிக்கம்.


## செயலமர்வுகள்

வேலணை, பெப்.28

தீவக வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 இல் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மதிப்பீட்டுக்கும் கணிப்பீட்டுக்குமென வழிகாட்டல் செயலமர்வில் 2ஆம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-267)

* * *

வேலணை, பெப்.28

தீவக வலயப் பாடசாலையில் ஆசிரியர்களுக்கான சங்கீத பாட செயலமர்வு இன்று சனிக்கிழமை கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெறும்.

தரம் 8இற்கான கல்வி மறுசீரமைப்பு விடயங்கள் இச் செயலமர்வில் கலந்துரையாடப்படவுள்ளதாக வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

* * *

வேலணை, பெப்.28

தீவக வலயத்தில் தரம் 10, 11இல் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பரீட்சைக்கும் கணிப்பீட்டுக்குமென வழிகாட்டல் செயலமர்வின் 2ஆம் நாள் செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும் எனத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-267)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.28

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது. (1-250)

* * *

சுழிபுரம், பெப்.28

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11.15மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

மகோற்சவ குருவாக பிரம்மஸ்ரீ ச.மு.ரவிக்குருக்கள் கலந்து கொள்வார். (204-28)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப்.28

மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறுமென பிரதேச செய [illegible] வாசன் அறிவித்துள்ளார். (1-207)


சிவமயம்

## தசாக கிரியை அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சர்வதாரி வருடம் மாசி மாதம் 7ஆம் நாள் (19.02.2009) வியாழக்கிழமை அபர பட்ச தசமி திதியில் அமரத்துவம் அடைந்த சாவகச்சேரி விளைவேலி ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான ஆதீனகர்த்தா

**பிரம்மஸ்ரீ ப.மகா கணபதி சர்மா**

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

28.02.2009 சனிக்கிழமை - தசாகம்
01.03.2009 ஞாயிற்றுக்கிழமை - ஏகோதிட்ட மாசியம்
02.03.2009 திங்கட்கிழமை - சபிண்டீகரணம்
03.03.2009 செவ்வாய்க்கிழமை - கிரஹயஜ்ஞம்

மேற்படி கிரியைகளில் தாங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*இல.15, மவுண்ட் றோட்,*
*ஹற்றன்.*
*தொ.இல.: 051- 2223904.* (83033)

திருமதி மகா கணபதி சர்மா,
பிள்ளைகள், மருமக்கள்.



BOC இலங்கை வங்கி, சாவகச்சேரி - லயன்ஸ் கழகம், சாவகச்சேரி
கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயமும் இணைந்து நடத்தும்

**இலவச மருத்துவ முகாமும் வங்கியின் நடமாடும் சேவையும்**

மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் 01.03.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு

| தலைவர்: | பிரதம விருந்தினர்: | சிறப்பு விருந்தினர்: |
|---|---|---|
| திரு.இ.குழந்தைவடிவேலு (சமாதான நீதிவான்) | திரு.ந.சிவரட்ணம் (வடமாகாண உதவிப் பொது முகாமையாளர்) | திரு.வ.சிறீப்பிரகாஸ் (பிராந்தியத் தலைவர், சாவகச்சேரி லயன்ஸ் கழகம்) |

**மருத்துவ சேவை**
யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்களுடன்
டாக்டர் K.T.S. சபாநாதன் (சாக்கோ வைத்திய நிலையம், யாழ்ப்பாணம்)
டாக்டர் (திருமதி) க.சௌந்தரராஜன் (சித்தமருத்துவ பீடம், கைதடி)

**வங்கியின் நடமாடும் சேவை**
கிராமிய கடன்வழங்கல் திட்டம், ஸ்மார்ட் இன்வெஸ்ரர் கணக்கு, சிறுவர் சேமிப்புக்கணக்குகள், மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்குதல்.

சலரோக பரிசோதனை, கண்பரிசோதனை மற்றும் சகல சிகிச்சைகளும் நடைபெற்றுக் கண்ணாடி தேவையானவர்களுக்குக் கண்ணாடி வழங்கப்படும்.
மருந்துகள் அம்பிகா பாமசி, சாவகச்சேரி நிறுவனத்தினால் வழங்கப்படும்.

போக்குவரத்துச்சேவை
கைதடி மேற்கு
கைதடி தெற்கு
கைதடி வடக்கு
கைதடி கிழக்கு
நாவற்குழி
} சனசமூக நிலையத்திலிருந்து மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகத்தினால் நோயாளருக்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விளம்பர அனுசரணை: திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில்

இல்வச விவசாய தொழில்நுட்ப ஆலோசனை
வழங்குபவர்: திரு.பா.சபேஸ்ரூபன், (காக்றோஸ் நிறுவன விவசாய, தொழில்நுட்ப ஆலோசகர்)
இடம்: ஸ்ரீ சச்சிதானந்தா என்ரப் பிறைசஸ், கைதடிச் சந்தி, கைதடி.
காக்றோஸ் எம்.கெம் விவசாய மருந்து விநியோகத்தர்கள். T.P: 0212225891, 077-2991623

கைதடி, நாவற்குழி மக்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.



## வைத்திய சேவை
## பிலிப்ஸ் நேசிங் ஹோம்
## Phillip's Nursing Home

நியாயமான கட்டணத்தில் தரமான சேவை

- வெளிநோயாளர் பிரிவு: காலை 8 மணி - 1.00மணிவரை பி.ப. 3.30 மணி - 7.30மணிவரை
- இரத்தம், சிறுநீர், சளி, மலம் பரிசோதனை (கொம்பியூட்டர் மயமான இயந்திரம் மூலம்)
- யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் பார்வையிடப்படும்.
- சுத்தமான, சுகாதாரமான வார்ட் வசதிகள்
- வைத்திய நிபுணர் ஆலோசனை

பொதுவைத்தியம், சத்திர சிகிச்சை, மகப்பேற்று வைத்தியம், என்பு முறிவு நெரிவு சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை குழந்தைகள் வைத்தியம்.

எங்கள் நோக்கம் உங்கள் சுக வாழ்வு

**228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

குறிப்பு: தூர இடத்து நோயாளர்கள் யாழ்.- கச்சேரி மினிபஸ் சேவை மூலம் ஆஸ்பத்திரி வாசலிலேயே இறங்கமுடியும்.

T.P.: 021 222 4172 (சி/557157)



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் இராசேந்திரம் இளஞ்செல்வன்**

மண் மகிழ 29.08.1976 | திதி: துவாதசி (07.03.2009) | மனம் நெகிழ 28.02.2007

எம் பிரிய அப்பாவே!
மரணப் படுக்கையில் தானும் எமக்கு
இப்படியாகும் என்று எண்ணவில்லையே!
நாமும் உம் அடி சேரும் வரை
உம் சிந்தனை வழி வாழ்வோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்டி வீதி,
சாவகச்சேரி.

மனைவி, மகள் மற்றும் குடும்பத்தினர்கள். (83103)



## மரண அறிவித்தல்

**கனகராஜா அரசரட்ணம்**

*('தமிழர் செந்தாமரை' பிரதம ஆசிரியர்)*



கொழும்பை பிறப்பிடமாகவும் Torontoவை வதிவிடமாகவும் கொண்ட கனக அரசரட்ணம் ('தமிழர் செந்தாமரை' பிரதம ஆசிரியர்) 24.02.2009 அன்று Torontoவில் காலமானார்.

அன்னார் அமரர் கார்த்திகேசு கனகராஜா - ஜெயலட்சுமியின் அன்பு மகனும், தம்பிராஜா - அமரர் பார்வதி அவர்களின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வினோ, அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிந்துவின் மாமனும் மதுமிதாவின் அன்பு அப்பப்பாவும் விஜயராஜா - மீனா அவர்களின் சம்பந்தியும் புஸ்பம், அமரர்களான இராஜரட்ணம், செல்வரட்ணம், நவரட்ணம் மற்றும் மனோரஞ்சிதம் (கனடா), இராஜேஷ்வரி, குணரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அமரர் சிவராம், மனோகரி, செந்தில், மனோ (கொழும்பு), அமரர் இராஜேஷ்வரன், ஆனந்தன், ஜெனி (கொழும்பு), பேபி, ரஞ்சன், பவா, ஜெயந்தி, சந்திரன், மோகன் (கனடா), ஆனந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.02.2009) சனிக்கிழமை பி.ப. 4 மணிமுதல் இரவு 9 மணிவரையும், நாளை (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிமுதல் இரவு 9 மணிவரையும், இல. 3280, Sheppard Avenue East, Scarborough (Warden & Sheppard)இல் உள்ள Highland Funeral Homeஇல் பார்வைக்காக வைக்கப்பட்டு 02.03.2009 திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணி வரை அதே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் 12 மணியிலிருந்து ஒரு மணி வரை 375, Mount Pleasant Road, (Mount Pleasant & St. Clair) Torontoஇல் அமைந்துள்ள Mount Pleasant Cemetry இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்றுத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி - ராஜி, மகன் - விநோத்.
416-707-6262, 905-477-0076, 416-824-8815.

(சி/57278)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## சிறீ கீதாஞ்ஜலி
**பெறுபேறு: 3ஏ (வடமராட்சி இந்துக் கல்லூரி)**

நான் தரம் 1இலிருந்து 3 வரை வன்னியில் கல்வி கற்றேன். பின்னர் 4-5 வரை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றேன். பின்னர் தரம் 6 முதல் உயர்தரம் வரை வடமராட்சி இந்துக் கல்லூரியில் கற்றேன். எனது கல்விக்குப் பெற்றோரும் சகோதரனும் அடித்தளமாக நின்று உதவி புரிந்தார்கள்.

எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் என எல்லோரும் எனக்கு ஊக்குவிப்புத் தந்தனர். இதனால் நான் பரீட்சையில் சிறப்பாகச் சித்திய அடையக்கூடியதாக இருந்தது. எனது சகோதரனின் வழிகாட்டலினால் கலைத்துறையைத் தேர்ந்தெடுத்தேன். தமிழ், அளவையியல், இந்துநாகரிகம் போன்ற பாடங்களைத் தெரிவுசெய்து கற்றேன். அளவையியல் கற்பதற்கு எனது சகோதரன் ஊக்குவிப்புத் தந்தார். ஏனைய பாடங்களைக் கற்பதற்குப் பாடசாலை ஆசிரியர்களும், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும் காரணமாக இருந்தனர். பாடங்களைக் கற்பதற்குப் பாடசாலை நூலகமும், பெரிதும் உதவி புரிந்தது. நான் கல்வி கற்பதற்கு எனது நண்பர்கள் மிகவும் உதவி செய்தனர்.

நான் சித்தியடையக் காரணமாக இருந்த எல்லோருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். எதிர்வரும் காலத்தில் ஆசிரியராக வந்து சமூகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவேன்.

## தங்கராசா சஞ்சிதா
**பெறுபேறு: 3ஏ (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)**



விடாமுயற்சியே எனக்குச் சிறந்த பெறுபேறு கிடைக்க வழி சமைத்தது. ஆரம்பக்கல்வி கற்றவேளையிலேயே பல்கலைக்கழகம் சென்று கற்கவேண்டும் என்ற அவாவும், பல்கலைக்கழகக் கல்வியின் பின்னர் சிறந்த விரிவுரையாளராக செயற்பட வேண்டுமென என்மனதில் எழுந்த ஆர்வமே பரீட்சையில் சிறந்த பெறுபேறு கிடைத்தது.

உயர்தர வகுப்பில் நான் தேர்ந்தெடுத்த பாடங்களைக் கவனமாகப் படிக்க அடித்தளமிட்டவர்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபரும் உபஅதிபரும் பாட ஆசிரியர்களும் ஆவர். இவர்களுடன் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் தந்த ஊக்கமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கக் கூடிய பெறுபேறு கிடைக்க ஊக்குவித்தது.

ஆரம்ப, இடைநிலைக்கல்வியினை மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் கற்றேன். எனது பெற்றோரின் எதிர்பார்ப்பினைப் பூர்த்தி செய்ததில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி.



## செபஸ்தியாம்பிள்ளை மேரிஸ்ரெலா
**பெறுபேறு: 2ஏபி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)**

எனது சகோதரனும் மூன்று சகோதரிகளும் எனக்கு வழங்கிய ஊக்குவிப்பும், ஆதரவுமே சிறந்த பெறுபேறுபெற வழிவகுத்தது. கல்வி ஒன்றே என் குறிக்கோளாக இருக்க வேண்டுமென அவர்கள் எனக்குத் தந்த ஊக்குவிப்பால் என்னால் பரீட்சையினைச் சிறப்பாக எழுதமுடிந்தது.

எனது சகோதரன் உயர்தரப் பரீட்சைக்குத் தேவையான குறிப்புகள் எங்கு கிடைத்தாலும் அதனைக் கொண்டு வந்து தருவார். அத்துடன் எனது மூன்று சகோதரிகளும் இரவில் படிக்கும்வேளையில் என்னுடன் விழித்திருந்து எனக்குத் தேவையானவற்றை வழங்கி வந்தனர். இவர்களது ஆதரவை மேம்படுத்த பரீட்சையில் மட்டுமல்ல விளையாட்டுத் துறை, கலைத்துறை ஆகியவற்றிலும் வெற்றிகள் பெற்று மகிழ்வித்தேன். அவர்களின் ஆவல், எதிர்பார்ப்பு ஆகியவையே எனது வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தது.

கிளாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் அங்குள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றேன். இடம்பெயர்வு காரணமாகச் சாவகச்சேரி, கச்சாய் வீதியில் வசித்தோம். இடைநிலைக்கல்விக்காகச் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இணைந்து கற்றேன்.

எமது கல்லூரி அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரின் ஒட்டுமொத்த அரவணைப்புடன் கூடிய வழிகாட்டலும் கற்பித்தல் முறைகளும் எனது வெற்றிக்கு மற்றொரு காரணமாகும்.

ஆசிரியை திருமதி மேரி ஞானராஜ் அவர்களும், ஆசிரியர் த.நாகேஸ்வரன் அவர்களும் தனித்துவமான நன்றிக்குரியவர்கள்.

## இன்பமலை நிசாந்
**பெறுபேறு: 2ஏஎஸ் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)**



நான் தரம் 9 வரை கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் கல்வி கற்று அதன் பின்பு தரம் 10 இலிருந்து விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டியில் கல்வி கற்றேன். எனது அப்பா ஒரு தச்சுத் தொழிலாளி. எனது அப்பா நான் கல்வி கற்பதற்குத் தேவையான அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்து என்னை மிகுந்த அக்கறையுடன் வளர்த்தார். எனது அம்மா கண்டிப்புடன் கூடிய அன்போடு எனது சகோதரர்களுடன் எதுவித குறைவுமின்றி அரவணைத்தார். நான் எனது நண்பர்களின் இல்லத்திலிருந்து கல்வி கற்றேன். நாம் 5 பேர் கல்வி கற்று ஐந்து பேருக்கும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்துள்ளது. பரீட்சைப் பெறுபேறு என்னை ஏமாற்றத்தின் மத்தியில் தள்ளியது. ஏனெனில் தமிழ் பாடத்தில் எஸ் தரம்தான் கிடைத்தது. ஆனபோதும் எனது மனதில் பெரிய திருப்புமுனையினை ஏற்படுத்தியது சித்திர பாடத்தில் நான் பெற்ற ஏ பெறுபேறு. எமது அயல் பாடசாலைகளில் இல்லாத ஏ பெறுபேறு எனக்குக் கிடைத்ததை இட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். சித்திரபாடத்தில் ஏ பெறுபேற்றினைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து சித்திர ஆசிரியர்களுக்கும், அதுமாத்திரமன்றி அளவையியல் கற்பித்த ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் விளையாட்டிலும் சராசரியாகப் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. என்னை இந்த நிலைக்கு இட்டுச் சென்ற கல்லூரி அதிபர், ஆசிரியர், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்கள் குறிப்பாக எனது அக்கா, அனைவருக்கும் நன்றிகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

## காயத்திரி கௌரிபாலா
**பெறுபேறு: 3ஏ (வட இந்து மகளிர் கல்லூரி)**



நான் தரம் 1 முதல் 5 வரை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றேன். பின்னர் தரம் 6 முதல் 13 வரை வட இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றேன். நான் உயர்தரப் பரீட்சையில் 3ஏ பெறுபேறு எடுத்தது எனது பெற்றோருக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தது.

நான் ஜி.சீ.ஈ. சாதரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து, கலைத்துறையினைத் தேர்வுசெய்தேன். கலைத்துறையில் தமிழ், புவியியல், சங்கீதம் ஆகிய மூன்று பாடங்களையும் கற்றேன். எனக்கு சிறுவயது தொடக்கம் இசைத்துறையில் அதிக ஈடுபாடு இருந்ததன் காரணமாக சங்கீத பாடத்தினைத் தெரிவு செய்தேன். வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் தரம் 4 வரை சிறந்த பெறுபேற்றைப் பெற்றது சங்கீத பாடத்தைப் பயில உறுதுணையாக அமைந்தது. எனக்குக் கிடைத்த சங்கீத குருமார்கள் என்னை நன்கு வழிப்படுத்தினர். அவர்களுக்கு எனது நன்றிகள்.

எனது தந்தை படப்பிடிப்பாளராகக் கடமையாற்றுகின்றார். எனது பெற்றோரும், எனது சகோதரரும் எனக்கு எந்த வகையிலும் இடையூறு செய்யாமல் நான் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்கு உறுதுணையாக அமைந்தனர்.

நான் சிறந்த பெறுபேற்றை அடைவதற்கு எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், எனது பெற்றோர் மற்றும் சகோதரர், எனக்குக் கற்பித்த தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவரும் உறுதுணையாக அமைந்தனர்.



## அருணாசலம் விமல்ராஜ்
**பெறுபேறு: 3ஏ (தேவரையாளி இந்துக் கல்லூரி)**

நான் ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழக அனுமதி பெறும்வரை தேவரையாளி இந்துக்கல்லூரியில் கல்வி பயின்றேன். என்னால் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை. இதனால் ஏற்பட்ட மனத்தாக்கம் சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை அடைய வேண்டும் என மன ஆதங்கத்தைக் கொடுத்தாலும் சாதாரண தரத்திலும் என்னால் சிறந்த பெறுபேற்றை அடையமுடியவில்லை. இந்த இரண்டினாலும் ஏற்பட்ட பாரிய மனவேதனைதான் என்னை உயர் தரத்தில் 3ஏ [மாவட்ட நிலை 74] என்ற பெறுபேறு பெற்றுக்கொள்ள வழிகோலியது.

உயர்தரத்தில் தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களைத் தெரிவுசெய்து கற்றேன். நான் சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவன். எனது அப்பா ஒரு கூலித் தொழிலாளி. இதனால் எனது சகோதரர்களுக்கு என்போன்று கல்வி கற்கும் வசதி கிட்டவில்லை. இதனால் அவர்களுடைய குறிக்கோள் நானாவது படித்து பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்பதுதான். இந்தக் குறிக்கோளும் எனது விடாமுயற்சியும்தான் இப்பெறுபேற்றிற்கு காரணமாக அமைந்தது. எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்கள், கிராமத்தவர்கள் வழங்கிய ஊக்குவிப்பும் வழிகாட்டலாலுமே என்னால் இப்பெறுபேற்றைப் பெற முடிந்தது. அத்துடன் எனது எதிர்கால இலட்சியம் என்னை ஆளாக்கிய என் சமூகத்திற்குப் பணியாற்றுவதாகும்.

சந்திப்பும், படங்களும்: ஔண்யன், கிருஸ்ணன், கணேசமூர்த்தி. 27


## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
## நூற்றாண்டுவிழாத் தொடர்பான அறிவித்தல்

நூற்றாண்டு நிறைவுச் சிறப்பு மலருக்காகவும், பாடசாலைப் பதிவுக்காகவும், கீழ்காணும் விடையங்களை பழைய மாணவர்களிடமிருந்தும், பாடசாலை ஆர்வலர்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம். (ஆவண மூலப்பிரதிகள் மீள உங்களிடம் தவறாது ஒப்படைக்கப்படும் என்பதற்கு உறுதியளிக்கின்றோம்.)

1. மகாஜனக் கல்லூரியின் வரலாறும் அது குறித்த ஆவணங்களும்.
2. காலந்தோறும் கல்லூரியில் ஏற்பட்டுவந்த மாற்றங்களும் ஆதாரங்களும்.
3. ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் உருவாக்கப்பட்ட கல்வியியல், கலை, இலக்கியப் பங்களிப்புக்கள்.
4. கல்லூரியின் பல்துறைச் சாதனைகள்.
5. கல்லூரியில் பணிபுரிந்த ஆசிரியர்கள், ஊழியர்கள் பற்றிச் சிறு கட்டுரைகள்.
6. கல்லூரியின் அதிபர்கள் பற்றிய கட்டுரைகள்.
7. சமூக விஞ்ஞானம், விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், கலை, அரசசேவை என்பவற்றில் சாதனை படைத்த மாணவர்களது விவரமும் அவர்களது ஆய்வுகள், சாதனைகள் பற்றிய கட்டுரைகளும்
8. கல்லூரி தொடர்பான வரலாற்றுச் சிறப்புவாய்ந்த படங்கள், பதிவுகள், ஆவணங்கள், தகவல்கள்.
9. இடப்பெயர்வுகள் ஏற்படுத்திய தாக்கங்கள்.
10. புலம்பெயர்ந்த பழைய மாணவர்களின் பங்களிப்புக்கள்.
11. கல்லூரி தொடர்பான சுவையான தகவல்களும் நிகழ்வுகளும்.
12. மகாஜனக் கல்லூரி பற்றிய உங்களது அனுபவங்கள். ஏனைய தகவல்கள்.

குறிப்பு:- இவை பற்றிய ஆக்கங்களையும் ஆவணங்களையும் 15.04.2009இற்கு முன்பாகக் கீழ்காணும் முகவரிகளுக்கு தயவு செய்து அனுப்பிவைக்கவும்.

மற்றும் மகாஜனக் கல்லூரியின் பழைய சஞ்சிகைகள் இருந்தால் அதனை பிரதி செய்யத் தந்துதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.


தொடர்புகொள்ளவேண்டியவர்கள்:

Principal, Mahajana College, Ampanai, Tellippalai (T.P.No: 021 222 3981)
Vanathi Kandeepan, 67, 2nd Lane, Ratmalana (T.P.No: 2 625 654)
S.Kathirgamathamby, 19 Campbell Place, Dehiwela (T.P.No: 2 721 504)
A.Gobalakrishnan 82/23, Chetty Street, Nallur, Jaffna. (T.P.No: 021 222 5355)

S.Kathirgamathamby, Secretary, Mahajana College, Tellippalai. OSA - Colombo Branch


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொன் அணிகளின் போர்' காட்சிகள்


'பொன் அணிகளின் போர்' என வர்ணிக்கப்படும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

வீரர்கள் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்படுவதையும் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. பிதா நோயல் விமலேந்திரன், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு.ஜெறோ செல்வநாயகம் ஆகியோர் போட்டியை ஆரம்பித்து வைப்பதையும், வீரர்கள் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை திருமதி உ.திருச்சபேசன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி நாகம்மா நாகராஜா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்
யா/கோக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

(83121)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தம்பி சிவகாமிப்பிள்ளை



சுழிபுரம், பறாளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவகாமிப்பிள்ளை (பிறக்கறாசி அக்கா) (26.02.2009) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மட்டுவில் சிவன் கோயிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமநாதனின் (உடுவில்) அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான வேதநாயகம், உலகநாயகம் மற்றும் பேரின்பநாயகம் (இந்தியா), முத்துநாயகம் (பங்களா வீதி, மல்லாகம்), சதாசிவநாயகம் (கொலண்ட்), திருமதி சிவலோகநாயகி குமாரகுலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ''செல்வவாசா'', வீரபத்திரர் கோயிலடி, பங்களா லேன், மல்லாகத்தில் இன்று (28.02.2009) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி,
கல்லாரை,
மல்லாகம்.

தகவல்:
செ.முத்துநாயகம்
(சகோதரன்).

(83117)

### திருமதி பாலசிங்கம் நாகம்மா



கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நாகம்மா கடந்த 22.02.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று புதுக்குடியிருப்பில் அகாலமரணமானார்.

அன்னார் நல்லையா- (காலஞ்சென்ற) புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலவாணர்- செல்லம்மாவின் மருமகளும் பாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும் வசந்தி (இலங்கை), பரமானந்தம் (பரன்- லண்டன்), சாந்தி (சாந்தா -லண்டன்), காலஞ்சென்ற நக்கீரன் (கலையரசன்), மயூரன் (கோபு- பிரான்ஸ்), அனுசாந்தி (அனு- லண்டன்), வளர்மதி (வாணி- லண்டன்), கோகிலன் (தினேஸ்- இலங்கை), இளஞ்சேரன் (சேரன்- லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் அன்னார் லண்டனில் வசிப்பவர்களான தயாபரன், குகனி, அருட்குமார் (பேர்லின் கமலம்ஸ்), விமல்ராஜ் ஆகியோரின் மாமியும் யதுர்ஷா, நிதுஷா ஆகியோரின் அம்மம்மாவும் ஹரிணியின் அப்பம்மாவும் அன்ன முத்து (பட்டு), சரஸ்வதி (வண்டு), சரோஜாதேவி (தேவி), லலிதாதேவி (லீலா), பூரணம் (கலா), புஸ்பராணி (ராணி) ஆகியோரின் அன்புச் சகோதரி யும் யோகராசா, நவஜீவன், விக்கினேஸ்வரன், நாகேஸ்வரி, புனிதவதி, காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, ஐயாத்துரை, அருமை, சிங்கராசா, தர்மகுலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் செல்வம், செல்வ மலர், செல்வராசா, காலஞ்சென்ற செல்வமதி, செல்வகுமார், மிதிலராஜ், பொன்ராஜ், தர்மிளா, தயந்தன், கிரிதரன், துசியந்தினி, காலஞ்சென்ற சிவதர்சினி, சிறிதரன், தர்மிகன், தர்மிகா, நிவேந்தன், நிதர்சனா, நிவேதன் ஆகியோரின் பெரிய தாயும் சுகந்தன் (லண்டன்), முகுந்தன் (லண்டன்), ஜெயந்தன், சுஜிதினி, சுபாஜினி ஆகியோரின் சிறியதாயும் நந்தினி, நளாயினி, நந்தகுமார், நளினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதுக்குடியிருப்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

தொடர்புகளுக்கு:
பரன் (ஷர்மி வீடியோ கோம்- லண்டன்) 0044129 3523093, 00447903139916,
கோபு (மயூரன்- பிரான்ஸ்) 0033614933214,
கண்ணன் (கமலம்ஸ், பேர்லின்- ஜேர்மனி) 00442089063729,
00447957965374
அனுவிமல்ராஜ் (லண்டன்) 00442089426958.


## ஆங்கிலம், சிங்களம் கற்கை நெறிகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குட்பட்ட இணுவில் கிழக்கு இளைஞர் கழகம் நடத்தும் 5 மாதகால ஆங்கிலம், சிங்களக் கற்கை நெறிகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெறுகிறனது.

பயிற்சி நிறைவில் சான்றிதழ்களையும் கழகம் வழங்கும். மேலதிக விவரங்களை கழக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (202)

## யாழ்.செயலகத்தில் அறிவகம் சேவைகள்

யாழ்.மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் அறிவகம் இணைய பாவனை, மின் அஞ்சல், ஸ்கானிங், தொலைபேசி, தொலைநகல், நிழல் பிரதி, கணனிப் பிரதியெடுத்தல் சேவைகளை அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கவுள்ளதாக யாழ்.அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அலுவலக வேலைநாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் சனிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை ஒரு மணி வரையும் இச்சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். (202)

## அனுமதிப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் இந்தாண்டுக்கான இதழியல் டிப்ளோமா முழுநேரக் கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சை இன்று சனிக்கிழமை நடைபெறமாட்டாது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (20 )

## வலி.மேற்கு வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள்

சங்கானை, பெப்.28

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினால், இப்பிரிவுக்குட்பட்ட சகல வீதிகளுக்கும், வீதிப் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன.

இதேவேளை, இப்பெயர்ப் பலகைகளில் எழுதப்பட்ட பெயர்கள் மஞ்சள், கறுப்பு வர்ணங்களால் எழுதப்பட்டு, நன்கு தெளிவாக இருந்தாலும் ஓரிரு வருடங்களில் இவ்வர்ணங்கள் அழிந்து விடும் என்றும், இப்பலகைகளைத் தாங்கிய இரும்புக் குழாய்களும் துருப்பிடித்து சேதமுறும் வாய்ப்பும் இருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (202-29)


## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் சுத்தம் செய்து குறைந்த விலையில் கிளையும் பெற்றுக்கொள்ளலாம்.

(83047)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் இளையவன் வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான்)

திதி: சதுர்த்தி (28.02.2009)

தோற்றம் 01.06.1933 — மறைவு 11.03.2008

அன்பைக் காட்டி அறிவையூட்டி
அன்போடும் பண்போடும் எம்மை
அரவணைத்த அப்பாவே!- இனி
எப்போது எம்மை அரவணைப்பீர்!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
சமூகத்திற்காய் உழைத்த
சரித்திர புருஷருள் ஒருவரானீர்!
வாழ வழிகாட்டிய அப்பாவே!
வருடம் ஒன்றில் நினைவு கூருகின்றோம்.

'ஜெயமகால்',
மானிப்பாய்.021 4591609.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(83122)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 02 * 04 * 1929



மறைவு 29 * 01 * 2009

### அமரர் சிதம்பரப்பிள்ளை பொன்னையா

கடந்த 29.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.02.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந் திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

(83102)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினையில் இலங்கையை இந்தியாவால் நிர்ப்பந்திக்க முடியவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி குற்றச்சாட்டு

புதுடில்லி, பெப்ரவரி 28

தமிழர்களைப் பாதுகாப்பதற்காக இலங்கையை மத்திய அரசால் நிர்ப்பந்தம் செய்ய முடியவில்லை. அந்த அளவுக்கு வெளியுறவு கொள்கையில் சமரசம் செய்து விட்டது - என்று எதிர்க்கட்சித் தலைவரும் பா.ஜ.கவின் மூத்த தலைவருமான அத்வானி குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டம் நேற்றுமுன்தினத்துடன் முடிந்தது. கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் நாடாளும்ன்ற வளாகத்தில் அளித்தபேட்டியின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

இந்தியாவின் தவறான வெளியுறவு கொள்கை காரணமாக இலங்கைப் பிரச்சினையில் தனது நிலைப்பாட்டில் சமரசம் செய்துகொண்டுள்ளது. கடந்த காலங்களில் இந்தியாவின் கருத்தை இலங்கை ஏற்று மதித்து வந்தது. ஆனால், தற்போது இலங்கையை நிர்ப்பந்தம் செய்ய மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் முடியவில்லை.

புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு அமைதி பேச்சுக்குத் திரும்ப வேண்டும். போர் நடை



பெறும் பகுதியில் இருந்து அப்பாவி மக்களை வெளியேற அனுமதிப்பதோடு அவர்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகள் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும்.

இந்தியாவில் நிலவும் பொருளாதார நெருக்கடியை வலிமையான மற்றும் பெரும்பான்மை பலம் கொண்ட அரசால் மட்டுமே சமாளிக்க முடியும். கடந்த 1952ஆம் ஆண்டு முதல் 2004 வரை 14 நாடாளுமன்றத் தேர்தலை நான் பார்த்து விட்டேன்.

ஆனால், எப்போதும் கண்டிராத வகையில் பொருளாதாரப் பிரச்சினை, விவசாயம், பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு, விலைவாசி, பணவீக்கம் போன்றவற்றை நாடு எதிர்நோக்கி உள்ளது. அதற்கு மத்திய அரசின் செயலற்ற போக்கே காரணம். சுயமாக முடிவெடுக்க முடியாமல் இருக்கிறது. காங்கிரஸ் கூட்டணி அரசின் அதிகாரம் முழுவதும் பிரதமர் இல்லத்தில் இல்லை. சோனியா வசிக்கும் இல்லத்தில்தான் உள்ளது.

பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி அரசு, மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டது. ஆனால், தற்போதைய காங்கிரஸ் கூட்டணி அரசோ கூட்டணி கட்சிகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் அரசாக இருக்கிறது. நாட்டின் பிரதமராக இருப்பவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவர வேண்டும். பொருளாதார நெருக்கடி காரணமாக ஒன்றரை கோடி மக்கள் வேலை இழப்பார்கள் - என்றார்.



இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகே வியாழக்கிழமை உண்ணாவிரதம் இருந்த தெலுங்கு முன்னேற்றக் கழகத்தினரிடையே விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் பேசுகின்ற போது.......

# இலங்கைத் தமிழினப் படுகொலையைக் கண்டித்து மாவட்டந்தோறும் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம்!

## விஜயகாந்த் அறிக்கை



சென்னை, பெப்.28

இலங்கையில் தமிழினப் படுகொலையைக் கண்டித்தும், அரசியல் தீர்வு காண ஐ.நா. சபையைத் தலையிடக் கோரியும் மாவட்டந்தோறும் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், பேரணிகள் நடத்தப்படும்

### போராட்டத்தைத் தீவிரப்படுத்துவேன் அவுஸ்திரேலியாவில் அவர் அறிவிப்பு!

ஈழத் தமிழருக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பேன். தமிழகம் சென்றவுடன் இப்பிரச்சினை குறித்து ஆலோசித்து போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவேன் - என்று அவுஸ்திரேலியாவிலிருந்து நடிகரும், தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

வானத்தைப்போல படத்தின் படப்பிடிப்பு விடயமாக ஆஸ்திரேலிய தலைநகரமான சிட்னியில் தங்கியிருக்கும் அவரை, ஆஸ்திரேலியத் தமிழினப் பிரதிநிதி ஒருவர் சந்தித்தார்.

இலங்கையில் தமிழர்கள் படும் துயரங்கள் அடங்கிய வீடியோ மற்றும் புகைப்பட ஆவணங்களை விஜயகாந்திடம் கொடுத்தார்.

அவற்றை வாங்கிக்கொண்ட விஜயகாந்த், ஈழத்தமிழருக்காக தொடர்ந்து குரல் கொடுப்பேன். தமிழகம் சென்றவுடன் இப்பிரச்சினை குறித்து ஆலோசித்து போராட்டத்தை தீவிரப்படுத்துவேன் என்று தெரிவித்தார்.

- என்று தேசிய முற்போக்குத் திராவிட கழகத் தலைவர் விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

அண்மையில் இலங்கையில் தமிழினப் படுகொலையை கண்டித்து தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில், எனது தலைமையில் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு மாபெரும் கண்டனப் பேரணியை நாம் நடத்தினோம்.

அதேபோன்று நம்முடைய மனிதாபிமான உணர்வையும், தமிழ் உணர்வையும் காட்டும் வகையில் கட்சியைச் சேர்ந்த மாவட்ட செயலாளர்கள் மாவட்டந்தோறும் மக்களை திரட்டி கண்டன ஊர்வலம், ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் போன்ற அறப்போராட்டங்கள் பொது மக்களுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாத வகையில் போராட்டங்களை நடத்த கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டச் செயலாளர்கள் போராட்டத்திற்கான திகதியும், இடத்தையும் குறிப்பிட்டு பொலிஸாரின் முன் அனுமதி பெற்று இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நடத்துவது அவசியம் என்று தெரிவித்து கொள்கிறேன்.

கன்னியாகுமரி, கோவை மாவட்டத்தில் மார்ச் முதலாம் திகதியும், தஞ்சாவூர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மார்ச் 2 ஆம் திகதியும், கடலூரில் 3ஆம் திகதியும், ஈரோட்டில் 4ஆம் திகதியும், திருச்சி - திருநெல்வேலியில் மார்ச் 5ஆம் திகதியும், திருப்பூர் - நாகையில் மார்ச் 6ஆம் திகதியும், நீலகிரி - தூத்துக்குடியில் 7ஆம் திகதியும் போராட்டங்களை நடத்த வேண்டும்.

அதேபோல், வேலூர் - மதுரையில் 8ஆம் திகதியும், திருவண்ணாமலை - சேலத்தில் 9ஆம் திகதியும், காஞ்சிபுரம் - சிவகங்கையில் 10ஆம் திகதியும், நாமக்கல் - திருவள்ளூரில் 11ஆம் திகதியும், திண்டுக்கல் - திருவாரூரில் 12ஆம் திகதியும், பெரம்பலூர் - தர்மபுரியறில் 13ஆம் திகதியும், புதுக்கோட்டை - அரியலூரில் 14ஆம் திகதியும், விருதுநகர் - கரூரில் 15ஆம் திகதியும் போராட்டம் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

# இலங்கைத் தமிழர்களை காப்பாற்றாமல் மாநில, மத்திய அரசுகள் ஏமாற்றிவிட்டன

## பாண்டியன் குற்றச்சாட்டு



திருவாரூர், பெப்.28

இலங்கைப் பிரச்சினையில் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றாமல் தமிழக அரசு கைவிட்டு விட்டது, மத்திய அரசு ஏமாற்றி விட்டது - என்று குற்றஞ்சாட்டினார் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா. பாண்டியன்.

அக்கட்சியின் திருவாரூர் மாவட்டம் சார்பில் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்ட ரூபா 15 லட்சம் தேர்தல் நிதியைப் பெற்றுக் கொண்டு, அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியவை வருமாறு -

1950இல் இந்திய அரசியல் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி இட ஒதுக்கீடு அளிப்பது தவறு எனத் தொடரப்பட்ட வழக்கில், உச்ச நீதிமன்றம் தவறு என்றே தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து தமிழகத்தில் பெரியார் மற்றும் கம்யூ. கட்சியினர் குரல் கொடுத்தனர். இது தொடர்பாக மக்கள் மத்தியிலும் பேச்சு எழுந்தது.

இதையறிந்த அப்போதைய பிரதமர் நேரு, இட ஒதுக்கீடு தேவை என அரசியல் சட்டத்தில் முதல் சட்டத் திருத்தத்தை கொண்டுவந்தார்.

ஆனால், இன்று இலங்கைப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சி கள், சட்டத்தரணிகள், மாணவர்கள் எனத் தமிழகத்தில் உள்ள 6 கோடி மக்களும் பல்வேறு போராட்டங்களை நடத்தியும், மனு அளித்தும், நேரில் சந்தித்துப் பேசியும் மத்திய அரசு இதுவரை இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமெனக் கூறவில்லை

இலங்கை பிரச்சினை குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதல்வர் கூட்டினார். பல போராட்டங்கள் நடத் தப்பட்டன. ஆனால், எவ்விதப் பலனும் இல்லை.

இந்தப் பிரச்சினையில் என் பின்னால் வாருங்கள் எனக் கூறிய முதல்வர், ஈழத் தமிழர்களைக் காப்பாற்றாமல் கைவிட்டு விட்டார். நம்பிக்கையுடன் டில்லி வரை சென்று பிரதமரைச் சந்தித்து வந்த அனைத்துக் கட்சியினரை மத்திய அரசு ஏமாற்றிவிட்டது - என்றார்.

# ஈழத்தமிழருக்கான ஆதரவுக் கூட்டத்தில் புதுவையில் 20 பேர் தீக்குளிக்க முயற்சி!

புதுக்கோட்டை அருகே தமிழின உணர்வாளர்கள் நடத்திய ஈழத்தமிழர்களுக்கான ஆதரவுக் கூட்டத்தில் 20 பேர் தீக்குளிக்க முயற்சித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடகாடு கிராமத்தில் தமிழின உணர்வாளர்கள் சார்பில் ஈழத்தமிழர்களுக்கான ஆதரவுப் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு அப்பகுதியின் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் விசை ஆனந்த் தலைமை தாங்கினார்.

திரைப்பட இயக்குநரும், நடிகருமான மணிவண்ணன், திரைப்பட இயக்குநர் ஆர்.கே.செல்வமணி, ஓவியர் புகழேந்தி ஆகியோர் சிறைப்புரை ஆற்றினார்கள்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படம் இடம்பெற்ற பதாதைகள் நூற்றுக்கணக்கில் இடம்பெற்றிருந்தன. இந்தத் பதாதைகளை அகற்ற வேண்டும் என்று பொலிஸார் கூட்ட அமைப்பாளர்களிடம் கூறினர்.

அப்போது கூட்டத்திற்கு தலைமை வகித்த விசை ஆனந்தின் தலைமையில் 5 பேர் மண் எண்ணை ஊற்றிக் கொண்டு தீக்குளிக்கப் போகிறோம் எனக் கூறினர். இதையடுத்து



பொலிஸார் அமைதியானார்கள்.

மீண்டும் ஒரு மணி நேரம் கழித்து புதுக்கோட்டை மாவட்ட எஸ்.பி. மூர்த்தி தலைமையில் பொலிஸாரே பிரபாகரனின் படம் இடம் பெற்றிருந்த பதாதைகளை, அப்புறப்படுத்த முயன்றனர். அப்போது தே.மு.தி.க. பிரமுகர் மன்மதன் தலைமையில் 15 பேர் பொதுக்கூட்ட மேடையிலேயே மண் எண்ணையைத் தங்களின் மேல் ஊற்றிக்கொண்டு தீக்குளிக்க போகிறோம் எனக் கூறினர்.

இதையடுத்து பதாதைகளை அகற்றுவதை பொலிஸார் கைவிட்டனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அசம்பாவிதம் ஏதும் நடைபெறாமல் இருக்க பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

# இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும்

## ஒஸ்கார் விருதையடுத்து திருக்குறளுக்கு இசையமைப்பேன்; ரஹ்மான் தெரிவிப்பு

சென்னை, பெப். 28



இலங்கையில் அமைதி நிலவவேண்டும் என்று விரும்புகிறேன். அங்கு யாரும் போரினால் சாகக்கூடாது என்று பிரார்த்தனை செய்கிறேன் - என்று ஏ.ஆர். ரஹ்மான் கூறியுள்ளார்.

ஒஸ்கார் விருதையடுத்து புதிய சாதனையாக திருக்குறளுக்கு இசையமைப்பேன் - என்றும் அவர் கூறியுள்ளார்.

`உலகத் திரையுலகின் மிக உயர்ந்த விருது, ஒஸ்கார். 'ஸ்லம் டாக் மில்லினர்' படத்துக்கு இசையமைத்ததன் மூலம் ரஹ்மான் 2 ஒஸ்கார் விருதுகளை வென்று, இந்தியாவையும், தமிழ்நாட்டையும் தலைநிமிர வைத்து இருக்கிறார். ஒஸ்கார் விருதுகளுடன் அமெரிக்காவிலிருந்து அவர் நேற்றுமுன்தினம் சென்னை திரும்பினார்.

பின்னர் அவர் சென்னையில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன் விவரம் வருமாறு -

கே - தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி படங்களில் இசையமைக்கும்போது, எந்த மொழிப் படத்தில் உங்களுக்கு அதிக சுதந்திரம் இருந்தது?

ப - என் தாய் மொழி தமிழ் என்பதால், தமிழ்ப் படங்களில் இசையமைக்கும்போதுதான் அதிக சுதந்திரம் இருந்ததாக உணர்ந்தேன்.

கே - இசைப்புயல், ஒஸ்கார் நாயகன் ஆகிய 2 பட்டங்களில் உங்களுக்குப் பிடித்தது எது?

ப - இரண்டுமே பிடிக்கவில்லை.

கே - வைரமுத்து எழுதும் புதிய தமிழ் தாய் வாழ்த்துப் பாடலுக்கு, எப்போது இசையமைப்பீர்கள்?

ப - அவர்எழுதி முடித்ததும், இசையமைப்பேன்.

கே - ஆஸ்கார் விருதை அடுத்து, உங்கள் சாதனையாக அடுத்த முயற்சி எது?

ப - திருக்குறளுக்கும், குனங்குடி மஸ்தான் கவிதைகளுக்கும் இசையமைக்கப் போகிறேன்.

கே - ஒஸ்கார் மேடையில் தமிழில் பேச வேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது?

ப - என் தாய் மொழியை அந்த இடத்தில் பேசவேண்டும் என்று விரும்பினேன். பேசினேன்.

கே - இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?

ப - இலங்கைத் தமிழர்களுக்காக நான், 'வெள்ளை பூக்கள்' என்ற பாடலுக்கு ஏற்கனவே இசையமைத்து இருக்கிறேன். இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்று விரும்புகிறேன். அங்கு யாரும் போரினால் சாகக்கூடாது என்று பிரார்த்தனை செய்கிறேன் - என்றார்.

# சென்னை உயர்நீதிமன்ற வன்முறைச் சம்பவம்: ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை

## உச்ச நீதிமன்றம் அறிவிப்பு

புதுடில்லி, பெப். 28

சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி நடந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி பி.ஸ்ரீ கிருஷ்ணா தலைமையில் விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதை உச்ச நீதிமன்றம் டில்லியில் வியாழக்கிழமை அறிவித்தது.

இச் சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்க இவருக்கு சி.பி.ஐ. சென்னை பிரிவைச் சேர்ந்த 2 அதிகாரிகள் துணை புரிவார்கள். பொலிஸாரை நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைய அனுமதித்த காவல்துறை அதிகாரிகள் மீது உடனடி நடவடிக்கை எடுப்பது குறித்தும் இந்தக் குழு பரிசீலிக்கும் என்றும் நீதிமன்று தெரிவித்தது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்த சம்பவம் தொடர்பாக இந்தக் குழு விசாரணை நடத்தி இரு வாரங்களில் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்று தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன், நீதிபதிகள் பி.சதாசிவன், ஜே.எம்.பஞ்சால் ஆகியோர் அடங்கிய ஆயம் உத்தரவிட்டது.

இந்த வழக்கின் அடுத்த விசாரணை மார்ச் 3ஆம் திகதி நடைபெறும்.

விசாரணைக்கு வசதியாக, சென்னை உயர் நீதிமன்ற மோதல் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் காவல்துறையின் 5 மூத்த அதிகாரிகள் மாற்றப்படுவார்கள் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

பொலிஸ் இணை ஆணையர் ராமசுப்பிரமணியன் ஏற்கனவே மாற்றப்பட்டு விட்டார் எனவும் அவரது தகுதிக்கு நிகரான சந்தீப் ராய், ரத்தோர் மற்றும் 3 துணை பொலிஸ் கமிஷனர்கள் சாரங்கன், பிரேம் ஆனந்த் சின்கா, பன்னீர் செல்வம் ஆகியோர் உடனடியாக மாற்றப் படுவார்கள் என்றும் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, பெப்.28

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நாளைய போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* உடுப்பிட்டி நவசிலன்ஸ் விளையாட்டு கழகம் எதிர் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம்.
* இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் எதிர் கரணவாய் மத்திய விளையாட்டுக்கழகம்.

(1-86)

* * *

யாழ்ப்பாணம், பெப்.28

கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் யோ.திரவியநாதன் தலைமையில் கொக்குவில் பரிசுத்த திரித்துவ ஆலயம் அருகில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் சிறப்பு விருந்தினராக ஆரம்பக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(1-6)

* * *

வண்ணை, பெப்.28

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் யாழ்.மக்கள் வசந்த எழுச்சி பேரவையால் நடத்தப்பட்டுவரும் மாபெரும் விளையாட்டு விழாவில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இன்று மாலை 4 மணிக்கு 'சி' பிரிவில் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக் கழகம் மோத உள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 'ஏ' பிரிவில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நயினாதீவு விளையாட்டுக் கழகம் மோதும்.

மாலை 4 மணிக்கு 'ஏ' பிரிவில் அரியாலை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழகம் மோதும்.(1-160)


## மணமக்கள் தேவை

1982 ரோகிணி, 8 இல் செவ்வாய் (32), B.A. படித்த கிராமிய வங்கியில் பணிபுரியும் மணமகளுக்கு ஐரோப்பிய நாட்டில் பணிபுரியும் மணமகனும், 1978, மூலம், 7இல் செவ்வாய் (32) ஆசிரியை மணமகளுக்கு, உள்நாட்டு அரசபணி புரியும் மணமகனும், 1971, பரணி 4ஆம் பாதம் 2 ல் செவ்வாய் (8) மணமகனுக்கு வெளிநாடு/உள்நாடு மணமகளும், 1964 பூரம் 4ஆம் பாதம் 4இல் செவ்வாய் (8) ஆசிரிய மணமகளுக்கு அரச பணிபுரியும் மணமகனும், 1975, மூலம் பாவக்கிரக மற்ற வெளிநாட்டில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகளும் தேவை.

தொடர்பு: 060 221 4682, 060 221 7016, 0777243129


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை கோபாலசாமி

(இளைப்பாறிய தபாலதிபர்)



தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தபாலதிபருமான கணபதிப்பிள்ளை கோபாலசாமி நேற்று (27.02.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பண்ணிசைத்திலகம் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காமாட்சிப்பிள்ளை, செல்வராணி, பாக்கியலட்சுமி, சற்குணசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தும்பளை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திகிரி, தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
மனைவி.

### வைத்திலிங்கம் தில்லையம்பலம்

(ஓய்வு பெற்ற கோள்வனவு உத்தியோகத்தர், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும்,சிறுப்பிட்டி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தில்லையம்பலம் நேற்று (27.02.2009) வெள்ளிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேசத்தின் அன்புக் கணவரும், சம்பந்தர், பாக்கியம், காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சதீஸ்குமார் (சதீஸ்),சசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், தாரணியின் அன்பு மாமனாரும், லக்சாலினி, டிநோதன், ஆகியோரின் அன்புப் பேரனும், கனகரத்தினம்-வள்ளிநாயகி தம்பதியினரின் சம்பந்தியும், மாணிக்கவாசகர் சோதிப்பிள்ளை, கோகுலாதேவி, சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2009) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி மேற்கு, பத்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்

சிறுப்பிட்டி மேற்கு, மனைவி:- சிவனேசம்
நீர்வேலி. மகன்:- சதீஸ்குமார்(சதீஸ்)

### பேரம்பலம் ஜயானந்தன்



கோண்டாவில் மேற்கு, பாடசாலை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் ஜயானந்தன் 26.02.2009 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் - இரத்தினம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் ஜெயரட்ணம், ஜெயமணி, ஞானரட்ணம், ஜெயராணி, ஜெகசோதி, தவராசா, வனிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நித்தியானந்தன் (கனடா), பாலசுந்தரம் (கோண்டாவில் மேற்கு), ரமேஸ்குமார் (கோண்டாவில் கிழக்கு), சத்தியராணி (கோண்டாவில் மேற்கு), ஜெயராணி (மன்னார்), சறோஜாதேவி (வண்ணார்பண்ணை) ஆகியோரின் மைத்துனரும் ஜெயரூபன், ஜெயரூபி, சுபிதன், வவி, றசி, றமேஸ், கோபிகா ஆகியோரின் அன்பு சிறியதகப்பனாரும் தாரணி, நிதாசன், தட்சாயினி (கனடா), இனோஜன், வினோஜா, கல்பனா, கபிஸ்ராஜ், கனிஸ்ரன், மிதுளா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.02.2009 கனடா றொறன்ரோவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (28.02.2009) சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
சகோதரன்.
ஞானரத்தினம் (சந்திரன்).

## கரவெட்டியில் விபத்து; வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.28

கரவெட்டி மூத்தவிநாயகர் கோயில் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த எம்.பெருமாள் (வயது 63) என்பவரே காயமடைந்தவராவார்.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

(1-78)

## மானிப்பாய் இந்துவில் கல்வித்தின நிகழ்வு

நவாலி, பெப்.28

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வித்தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளன.

''யுனிசெவ்'' ஆதரவுடன் சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளிலிருந்து கல்வித் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் சாதனை படைத்த மாணவர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன், இளைப்பாறிய கோட்டப் பணிப்பாளர் அ.தனபாலசிங்கம், ஆங்கிலபாட உடற்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த ஆண்டு சாதனை படைத்த 300 மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதல்களும் வழங்கப்படுகின்றன.

(1-100)


## விற்பனைக்கு

டெக்குடன் சேர்ந்த T.V. 1 - 14 Pacific
DVD Player 2 (Pacific & jvc)
CD Player உடன்சேர்ந்த ரேடியோ 2 (Sony & Alba)
(மேலுள்ள பொருள்கள் திருத்த வேலைகளுடனானவை)
100 W 1 சோடி Sharp Box (புதியது)
பல்லொளிக் T.V.14" பெட்டியும் 3 கொம்பியூட்டர் (மெசின்மட்டும்)
டெக் & DVD, CD Player (திருத்தவேலை உள்ளவை)
தொடர்புகளுக்கு ... 0777 141167
இல.75/10, செட்டித் தெரு, நல்லூர்.


## கண்ணீர் அஞ்சலி

சித்தன்கேணி ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் ஆலய பரிபாலன சபை உப தலைவர்

### செல்லையா ஜெயானந்தம் (J.P)

அவர்கள் (27.02.2009) வெள்ளிக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சித்தன்கேணி ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் ஆலயம்,
சித்தன்கேணி.

ஆலய பரிபாலன
சபையினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 ★ 07 ★ 1956



விண்ணில் 10 ★ 03 ★ 2008

### அமரர் செல்லையா கணேசன்

திதி: திருதியை (28.02.2009)

அன்பால் வழிநடத்தி அறிவூட்டியே
நின்பால் உறவுகளைத் துயரிலாழ்த்திப்
பொன் போல் ஓராண்டு சென்றாலும்
'எம் குடும்பத் துயரமின்னும் ஆறவில்லை.

அம்மன் வீதி,
நவாலி தெற்கு.

குடும்பத்தினர்,
மயூரபாலன்
(மகன்).

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் கந்தப்பு



புங்குடுதீவு, 8 ம் வட்டாரம், மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் தற்போது முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆறுமுகம் கந்தப்பு நேற்று (27.02.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - செல்லம் தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகம்மாவின் அன்புக் கணவரும் முத்துலிங்கம், இராசலிங்கம்; காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் ஜெயராசசிங்கம், கமலேஸ்வரி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ராணி, நாகேஸ்வரி, திலகம், இராசலட்சுமி, பத்மநாதன், பொற்பாவை ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நாகமம் மற்றும் கந்தையா, தம்பிராசா, பொன்னம்மா, தெய்வானை பொன்னையா ஆகியோரது அன்புச் சகோதரரும் விமலாவின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2009) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லையா ஜெயானந்தம் (ஜெயம் J.P)

(சித்தன்கேணி ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் ஆலய பரிபாலனசபை உபதலைவர், தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபை நிர்வாக உறுப்பினர், சித்தன்கேணி மகா கணபதி பிள்ளையார் கோவில் நிர்வாக சபை உறுப்பினர், சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழக முன்னாள் போஷகரும் தற்போதைய கௌரவ உறுப்பினரும்)



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ஜெயானந்தம் நேற்று (27.02.2009) வெள்ளிக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா (கார்த்திப்பிள்ளை) - கண்ணாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைரவநாதன் மற்றும் இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் பிரியதர்சினியின் அன்புக் கணவரும் சிந்துஜா, ஜெயக்கணேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி சண்முகநாதன் இந்திராணி (மலேசியா), திருமதி கனகரட்ணம் புஸ்பராணி (மலேசியா), திருமதி நவரட்ணம் செல்வராணி, திருமதி இராஜரட்ணம் மனோகரி, திருமதி கணேசராசா யோகேஸ்வரி (கொழும்பு), சிவானந்தம் (சுவிஸ்), திருமதி ஸ்கந்தமயம் லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வகுமார், திருமதி யோகன் நளாயினி (கனடா), திருமதி மகாலிங்கம் மாதினி (அமெரிக்கா), திருமதி திருலோகன் விநோதினி(கனடா), கந்தகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.02.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'இராணி வாசம்',
டச்றோட், சித்தன்கேணி.
T.P. No. 060 221 8479, 077 1907487

தகவல்:
பிரியதர்சினி (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உதயன்' ஆசிரியர் கைது குறித்து தமிழகத்தில் இருந்தும் கண்டனங்கள்

கொழும்பு, பெப்.28

உதயன் ஆசிரியரும், சுடர் ஒளி பிரதம ஆசிரியருமான ந.வித்தியாதரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழகத்தில் இருந்தும் கண்டனங்கள் வெளியாகியுள்ளன.

அவை வருமாறு:-

**காணமற்போனோரைத் தேடியறியும் குழு**

காணாமற்போனோரைக் கண்டறியும் குழு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சுடர் ஒளி பத்திரிகை ஆசிரியர் வித்தியாதரன் கைதுசெய்யப்பட்டவிதம் பொலிஸாரின் முறையற்ற செயற்பாட்டுக்கு உதாரணமாக அமைந்துள்ளது..

உரிய நேரத்தில் வித்தியாதரனின் உதவியாளர்களும், மக்களும் செயற்பட்டதால் அவர் மீது புரியப்பட்ட அநீதியான செயற்பாடு வெளிச்சத்திற்கு வந்தது. அண்மைக்காலமாக இப்படி வெள்ளைவானில் வந்து கடத்தப்பட்டவர்கள் பாதுகாப்புப் படையினரோ, பொலிஸாரினாலோ மேற்கொள்ளப்பட்டு வந்தமை ஊர்ஜிதமாகிறது. எனவே, இதுவரை காணாமல் போனோர் தொடர்பாக அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற தகவலை வெளியிடவேண்டும்.

எனவே, இத்தகைய நிலைகள் மேலும் நிகழாமல் இருப்பதற்கு பொதுமக்கள் விழிப்புடன்' இருக்கவேண்டும் என்பதுடன், இதுதொடர்பாக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுடர் ஒளி பத்திரிகை ஆசிரியர் கைது சம்பந்தமாக காணாமற்போனோரைத் தேடியறியும் குழு வன்மையாகக் கண்டிக்கிறது - என்றுள்ளது.

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**

இலங்கையில் இன்று தொடரும் போர்ப் பின்னணியில் கைதாகியிருக்கும் நடேசபிள்ளை வித்தியாதரனின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளரும் 'ஜனசக்தி' நாளிதழின் ஆசிரியருமான தா.பாண்டியன் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையின் தலைநகர் கொழும்பில் இருந்து வெளிவரும் 'சுடரொளி', யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' ஆகிய பத்திரிகைகளின் ஆசியர் நடேசபிள்ளை வித்தியாதரன், கொழும்பிலுள்ள கல்கிஸை என்னும் இடத்தில் ஒரு மரணத்தின் இறுதி நிகழ்ச்சிக்கு சென்றபோது கடத்தப்பட்டார் என்ற செய்தி தொடக்கத்தில் வெளியானது.

வெள்ளை வானில் வந்தவர்கள் இவரைக் கடத்தியிருக்கின்றனர். இதற்கு முன்னர் வெள்ளை வானில் கடத்தப் பட்டவர்கள் உயிருடன் இருக்கின்றார் களா? அல்லது இறந்து விட்டார்களா? கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில் 'உதயன்' ஆசிரியர் கடத்தப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தி, உலகம் முழுவதுமுள்ள ஊடகவியலாளர்களும், இலங்கையின் ஊடகவியலாளர்களும் உடனடியாக எதிர்ப்புத் தெரிவித்ததன் விளைவாக, இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது.

எப்படிப் பார்த்தாலும் இன்றைய இலங்கையின் போர் பின்னணியில் கைதாகியுள்ள வித்தியாதரன் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

தொடர்ந்து, இலங்கையில் பத்திரிகையாளர்களின் சுதந்திரம் முழுமையாகப் பறிக்கப்பட்டு வருவது உலகறிந்த உண்மை. முன்னர் புகழ்மிக்க பத்திரிகையாளர்கள் லசந்த விக்கிரமதுங்க, சிவராம் போன்றவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

உள்நாட்டுப் போரில் பெரும் எண்ணிக்கையில் தமிழ் மக்கள் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் பகுதிக்கு யாரும் சென்று செய்தி சேகரிப்பதற்கான உரிமையைக்கூட அங்கு யாருக்கும் வழங்கவில்லை.

இந்தக் கொடுமை மிகுந்த சூழலில் தான், நடேசபிள்ளை வித்தியாதரனின் கைது சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

ஒரு மூத்த பத்திரிகையாளருக்கு நேர்ந்த, இந்த கொடுமையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இந்திய அரசும், அனைத்துலக சமூகமும் இவரது விடுதலைக்கு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றது - என்றுள்ளது.

**தமிழ்நாடு பத்திரிகையாளர்கள்**

'ஒடுக்குமுறைக்கு எதிரான பத்திரிகையாளர்' மன்றத்தின் சார்பாக அதன் ஒருங்கிணைப்பாளர்களான டி.அருள்எழிலன், சரவணன் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

தமிழ்நாட்டில் உள்ள ஊடகவியலாளர்கள் என்ற முறையில், ந.வித்தியாதரனின் கைது அல்லது கடத்தல் குறித்து மிகுந்த கவலை அடைகின்றோம். மனித உரிமைகள் மீறப்பட்டு பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுவரும் சூழலில், இந்தக் கைது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கையில் எழுந்துள்ள போர்ச்சூழல் என்பது அங்கு வாழும் தமிழ் மக்களின் இயல்பான சமூக வாழ்வை முற்றிலுமாக சீர்குலைத்திருப்பது நீங்கள் அறிந்ததே!. இலங்கையை ஒரு ஜனநாயக நாடாக அனைத்துலக சமூகம் அங்கீகரித்திருக்கும் சூழலில் போர் வெறி மிக மோசமான அளவுக்கு பரவி வருகின்றது.

மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், செஞ்சிலுவைச் சங்கத்தினர் போன்றோர் கூட போர் பூமிக்குள் எப்பக்க சார்புமற்று பணி செய்ய முடியாத சூழல்.

2006 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை இருபதுக்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் இலங்கையில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இந்த வகையில், நீண்டகாலக் கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளை நெரிக்கப்படுவதன் அடையாளமாக ஜயாத்துரை நடேசன், மயில்வாகனம் நிமலராஜன், ரிச்சர்ட்டி டி சொய்சா, தேவிஸ் குருகே, தர்மரத்தினம் சிவராம், ரேலங்கி செல்வராஜா, நடராஜா அற்புதராஜா, ஐ.சண்முகலிங்கம், சுப்ரமணியம் சுகிர்தராஜன், சின்னத்தம்பி சிவமகாராஜா, சம்பத் லக்மால் சில்வா, இசைவிழி செம்பியன், ரி.தர்மலிங்கம், சுரேஸ், கேதீஸ் லோகநாதன், சந்திரபோஸ், புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி எனப் பலரும் படுகொலையாகி வீழ்ந்திருக்கின்றனர்.

இந்த வருடத்தின் தொடக்கத்தில் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி புகழ்பெற்ற 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியரும் சட்டத்தரணியுமான லசந்த விக்கிரமதுங்க கொழும்பில் மர்மமான முறையில் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை (26ஆம் திகதி) யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் ஆசிரியரும் கொழும்பில் இருந்து வெளிவரும் 'சுடரொளி' பத்திரிகையின் ஆசிரியருமான நடேசபிள்ளை வித்தியாதரன் (வயது 50) கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் வித்தியாதரன் கடத்தப்படவில்லை கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார் என்று இலங்கையின் ஊடகப் பேச்சாளர் றஞ்சித் குணசேகர தெரிவித்திருக்கின்றார்.

ஒரு ஊடகவியலாளரை அரசே கடத்திக் கைதுசெய்து விசாரிக்கும் விசாரணை முறைகளை வன்மையாக கண்டிக்கின்றோம்.

சந்தேகிக்கப்படும் நபர்களை விசாரணைக்கு உட்படுத்தவென்று நீதிமன்ற நடைமுறைகள் இருக்கும் போது இவ்விதமான நடவடிக்கைகள் அச்சமூட்டுகின்ற ஒன்றாக இலங்கையில் வளர்ந்து வருவது கவலையளிக்கின்றது.

தமிழகத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் என்ற முறையில் ந.வித்தியாதரனின் கைது அல்லது கடத்தல் குறித்து மிகுந்த கவலை அடைகின்றோம் - என்றுள்ளது.

**அமெரிக்காவில் இயங்கும் மனித உரிமைகள் இயக்கம்**

உதயன், சுடர் ஒளி பத்திரிகைகளின் ஆசிரியர் வித்தியாதரன் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை குறித்து அமெரிக்காவில் இயங்கும் மனித உரிமைகள் இயக்கம் இலங்கை அரசைக் கண்டித்திருக்கின்றது.

'செய்தியாளர்களைப் பாதுக்கும் அமைப்பு' என்ற பெயரில் இயங்கும் இந்த இயக்கம், அரசைக் கண்டித்து செய்தி வெளியிடும் ஊடகங்களை அரசு ஒடுக்கி - நசுக்குவதைத்தான் வித்தியாதரன் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது எனச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

# நீதி மற்றும் நேர்மையான அணுகுமுறையின் பெயரால் வித்தியாதரனை விடுதலை செய்யவும்

## கூட்டமைப்பு எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,பெப்.28

அரசின் அணுகுமுறையை அனுசரித்துட் போகுமாறு பத்திரிகைகளை நிர்ப்பந்திக்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்ட பயங்கர சதித்திட்டத்தின் ஓர் அங்கமே வித்தியாதரனின் கைது.

நீதி மற்றும் நேர்மையான அணுகுமுறை என்பவற்றின் பெயரால் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு வேண்டுகின்றோம்- என்றுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின். நாடாளுமன்ற உறுப்பினரான என்.ஸ்ரீகாந்தா விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தொடரும் படைநடவடிக்கைகளின் விளைவால் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களைப் பற்றிய உண்மைகள் மறைக்கப்பட்டு வருகையில் அவற்றை வெளிக்கொண்டு வருவதில் பங்காற்றி வந்திருக்கும் 'சுடர் ஒளி' மற்றும் உதயன் நாளேடுகளில் துணிச்சலான குரலை மௌனிக்க வைக்க எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கையே அதன் ஆசிரியரான என். வித்தியாதரன் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் செயல்.

அவமதிக்கும் விதத்திலும் வெறுத்தொதுக்கப்பட வேண்டிய முறையிலும் வித்தியாதரன் கைது செய்யப்பட்டுள்ளார். ஒருவரைக் கைது செய்யும் போது கட்டாயமாக பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள் அனைத்தும் அவரின் விடயத்தில் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பது தெளிவானது.

ஜனநாயக ஆட்சி முறையின் தூண்களில் ஒன்றான ஊடக சுதந்திரத்துக்கு இந்த நாட்டில் பாரிய சவால் விடுக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தின் அணுகு முறையை அனுசரித்துப் போகுமாறு பத்திரிகைகளை நிர்ப்பந்திக்கும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் பயங்கரமானதோர் சதித்திட்டத்தின் ஓர் அங்கமே வித்தியாதரன் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை. (அ-6)

# நோர்வேயில் இந்தியத் தூதரகத்தின் முன்னால் புலம்பெயர்ந்த தமிழர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

கொழும்பு, பெப். 28

நோர்வேயில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் வியாழக் கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணி வரை பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கலந்துகொண்டு கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

போர் நிறுத்தத்தின் அவசியம் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கு அமைய நிபந்தனையற்ற உடனடிப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு இந்தியா உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

'தமிழர்கள் மீதான படுகொலைகளை இந்தியா தடுத்து நிறுத்த வேண்டும்.'

'ஐக்கிய நாடுகள் சபையின் உதவி நிறுவனங்கள், அனைத்துலக கண்காணிப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை வன்னிக்குள் செல்ல அனுமதித்தல் வேண்டும். '

'தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்.' ஆகிய கோரிக்கைகள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

கவனயீர்ப்பு நிறைவில் நோர்வேக்கான இந்தியத் தூதுவர் பான்பிட் ஏ. ரோய் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருக்கு கோரிக்கை மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

இதேவேளை, வன்னியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து அவுஸ்திரேலியா, சிட்னி புலம்பெயர்ந்த தமிழர்களால் நேற்றுமுன்தினம் நகரில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். கனடாவிலும் புலம்பெயர்ந்த தமிழ் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். (அ-சி)

# பாவித்த 'சிறிஞ்' ஊசியை மீண்டும் பயன்படுத்தியதால் 40 பேர் பலி!

## குஜராத்தில் வைரஸால் ஏற்பட்ட பாதிப்பு

மொசாரா, பெப்.28

குஜராத் மாநில மொசாரா மாவட்டத்தில் திடீரெனப் பரவிய ''ஹெப்பரிட்டிஸ் டி'' என்ற வைரஸ் கிருமியினால் 40 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

வைத்தியசாலைகளில் மருந்து ஏற்றப் பயன்படுத்தப்படும் (சிறிஞ்) ஊசியை மீண்டும் மீண்டும் பயன்படுத்தியதாலேயே இந்த நோய்த் தொற்று ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபோன்ற ஊசிகளை தனியார் வைத்தியசாலைகளில் இருந்து பெற்றுப் பாவித்ததாலேயே நோயாளர்கள் பலியாகினர் என்று சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

பயன்படுத்திய ஊசிகளை வாங்கி மொத்தமாக விற்பனை செய்த நபரொருவரையும் தனியார் துறை வைத்தியர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். சுகாதாரத்துறையினர் நடத்திய தேடுதலில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட 'சிறிஞ்' ஊசிகள் பெரும் எண்ணிக்கையில் கண்டு பிடிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-7)

# மலையகத்தில் 12 தமிழ் இளைஞர்கள் கைது; 8 பேர் யாழ்.குடாநாட்டைச் சேர்ந்தவர்கள்

ஹற்றன், பொகவந்தலாவை, கொட்டகல மற்றும் நுவரெலியா பகுதிகளில் நேற்றுக்காலை இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலின்போது 12 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பப் பயிற்சிப் பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் முறையிடப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களில் எட்டுப்பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சமையல் காஸ் விலை நேற்றுக் குறைப்பு

சமையல் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளது. இதை நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

12.5 கிலோகிராம் நிறையுடைய லாவ் காஸின் விலை 334 ரூபாவாலும், ஷெல் காஸின் விலை 310 ரூபாவாலும் குறைக்கப்பட்டது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

இந்த விலைக்குறைப்பின்படி 12.5 கிலோகிராம் நிறையுடைய ஷெல் காஸின் விலை ஆயிரத்து 326 ரூபாவாகவும், லாவ் காஸின் விலை ஆயிரத்து 93 ரூபாவாகவும் விற்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரை காக்கக்கோரி தமிழகத்தில் விஜயகாந்த் கட்சிப் பிரமுகர் தீக்குளிப்பு!

சென்னை, பெப்.28

இலங்கையில் நடந்து வரும் போரில் அப்பாவித் தமிழர்களை காப்பாற்றக்கோரி தேமுதிக பிரமுகர் சீனிவாசன் என்பவர் தீக்குளித்து, ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், வானிணம்பாடியை அடுமுத்த வள்ளிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சீனிவாசன். இவருக்கு வயது 36. இவர் சிறுவயது முதல் விஜயகாந்தின் தீவிர ரசிகர். விஜயகாந்த் அரசியல் கட்சி ஆரம்பித்ததுமுதல், வள்ளிப்பட்டு கிராமத்தின் தே.மு.தி.க. கிளை செயலாளராக உள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை வாணியம்பாடி நகருக்குச் சென்றுள்ளார். அப்போது பஸ் நிலையத்தில் இலங்கையில் நடக்கும் போரில் பாதிக்கப்படும் அப்பாவித் தமிழர்களை காக்கக் கோரி சென்னையில் தீக்குளித்த முத்துக்குமாரின் படம் அஞ்சலிக்காக



வைக்கப்பட்டிருந்தது.

இரவு வீட்டுக்கு வந்தவர், தொலைக்காட்சியைப் பார்த்துள்ளார். தொலைக்காட்சிச் செய்திகளில் ஈழப்பிரச்சனை குறித்து படம் ஓடியது. இதைப்பார்த்த சீனிவாசன், இலங்கையில் இப்படிக் கொடுமை நடக்கிறது. இதைத் தடுக்க வேண்டும் என்று தனது குடும்பத்தாரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

இரவு 10.50 மணிக்கு வீட்டில் இருந்த மண் எண்ணைக் கானை திடீரென எடுத்துக்கொண்டு, தனது வீட்டருகே இருந்த தே.மு.தி.க. கொடி கம்பத்துக்குப் போனார். தன் மீது மண் எண்ணையை ஊற்றித் தீ வைத்துக்கொண்டார்.

தீ பற்றி எரிய ஆரம்பித்தவுடன், தீயின் எரிச்சலால், அவர் கத்திக்கொண்டு ஓட, அவரை குடும்பத்தாரும், ஊராரும் சேர்ந்து தீயை அணைத்து வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

ஆனால் தீக்காயம் அதிகமாக இருந்ததால் மேல் சிகிச்சைக்காக சீனிவாசனை வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டுசென்றனர். (அ-சி)

# ஈழத் தமிழர் பிரச்சினைக்காக யாரும் தீக்குளிக்க வேண்டாம்!

## மன்றாடுகிறார் விஜயகாந்த்

சென்னை, பெப். 28

இலங்கைப் பிரச்சினைக்காக யாரும் தீக்குளிக்க வேண்டாம் - என்று நடிகரும், தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்த் மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தேசிய முற்போக்குத் திராவிட கழகம் தொடர்ந்து இலங்கை தமிழர்களின் இன்னல்களை தீர்க்க ஜனநாயக முறையில் நடத்தி வரும் போராட்டங்களில் கட்சியினர் கலந்து கொள்ள வேண்டுமே தவிர, தனிப்பட்ட முறையில் தீ வைத்து கொண்டு உயிரை மாய்த்து கொள்ளும் முயற்சியில் எக்காரணத்தை முன்னிட்டும் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டம், வள்ளிப்பட்டு ஊராட்சியை சேர்ந்த கட்சியின் கிளை செயலாளர் சீனிவாசன் தீக்குளித்தார் என்பதைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தேன். இளைஞர்கள் சாதிக்க பிறந்தவர்களே தவிர, சாவதற்கு பிறந்தவர்கள் அல்ல என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தொண்டரும் வீட்டிற்கும், நாட்டிற்கும் பயன்படுபவராக இருக்க வேண்டுமென்று நான் அடிக்கடி வலியுறுத்தி வரும் கருத்தாகும். தீக்குளிக்கும் முயற்சியில் தயவு செய்து கட்சியினர் ஈடுபட வேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். தீக்குளிப்பது என்பது இதுவே முதலும், கடைசியுமாக இருக்க வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது.

# இந்த ஆண்டு சர்வதேச சந்தையில் அரிசி விலை குறையும்; ஐ.நா. அறிவிப்பு

நியூயோர்க், பெப். 28

இந்த ஆண்டு சர்வதேச சந்தையில் அரிசியின் விலை குறையும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. விளைச்சல் அமோகமாக இருப்பதே இதற்கு முக்கியக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு அரிசி விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் விலை குறைய வாய்ப்புள்ளது. ஆனால், சர்வதேச பொருளாதார சரிவு காரணமாக சில நாடுகளில் விலை குறையாமல் போவதற்கான வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

சர்வதேச அளவில் கடந்த ஆண்டு மசகு எண்ணெய் விலையும் உரத்தின் விலையும் உயர்வடைந்தன. எனினும், அதிக அளவில் அரிசி விளைச்சலுக்கு அரசுகள் ஊக்குவிப்பு அளித்தமையால் விளைச்சல் அதிகரித்துள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் வேளாண்மை மற்றும் உணவு பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அனைத்துக்கும் மேலாக சாதகமான இயற்கைச் சூழல் நிலவியதும் விளைச்சல் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

ஏழைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, விலையைக் கட்டுப்படுத்த அரசுகள் பல நடவடிக்கைகள் எடுத்து விளைச்சல் அதிகரிப்புக்கு வழிவகுத்துள்ளன. அரிசி உற்பத்தியை அதிகரித்து , அரிசி குறைந்த விலையில் கிடைப்பதை கடந்த ஆண்டு அரசுகள் உறுதிசெய்துள்ளன.

இருப்பினும், 2009 ஆம் ஆண்டில் அரிசி விலை குறைந்தாலும் பொருளாதார தேக்க நிலை காரணமாக மக்கள் அதிக நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

எனவே, இந்த விடயத்தில் அந்தந்த அரசுகள் உரிய நடவடிக்கை எடுத்து அரிசியின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து, அது அனைத்துத் தரப்பினருக்கும் கிடைப்பதற்கு உரிய வழிவகை செய்ய வேண்டும் என்றும் இச்சபை கோரியுள்ளது.

கடந்த ஆண்டு நெல் உற்பத்தி 68 கோடி தொன்களாக உயர்ந்துள்ளது. முந்தைய ஆண்டைவிட இது 3.5 சதவீதம் கூடுதலாகும். உலகம் முழுவதும் 250 கோடி மக்கள் அரிசியைத்தான் பிரதான உணவாக உட்கொள்கின்றனர். விளைச்சல் பரப்பளவு 2.5 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டு சர்வதேச சந்தையில் அரிசியின் விலை 80 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் சபை மேலும் தெரிவித்துள்ளது.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளும் திருப்தியடைந்துள்ளன என்பது இதன் மூலம் தெரிகின்றது.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையென்றால் அதைத் தாம் வழங்குவோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. அப்படியென்றால் அக்கட்சி அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

இது இவ்வாறிருக்க, ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ள மேல்மாகாண சபைத் தேர்தலில் அரசு அமோக வெற்றியீட்டும். மேல்மாகாண சபையை நாம் மீண்டும் கைப்பற்றுவோம் - என்றார். (அ-சி)

## பயங்கரவாதத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த வாகனத்திலும் வரலாம்.

கடந்த 20 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தலைநகரில் நடத்திய விமானத் தாக்குதல் தொடர்பிலான தொலைபேசி இலக்கங்கள் குறித்தே வித்தியாதரனைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலான செயல்களில் இருந்து அரசு என்ற வகையில் நாட்டைக் காப்பாற்றும் பொருட்டு பல நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள நேரிட்டது.

அந்த வகையில் வித்தியாதரன் இருக்கும் இடத்தில் பல விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. விசாரணைகளின் பின்னர்தான் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதா அல்லது இச்சம்பவத்தில் அவருக்குத் தொடர்பில்லை எனில் அதற்கேற்ற நடவடிக்கைகளை தொடர்வதா என்பதை தீர்மானிக்க முடியும் - என்றார். (அ)

## பயங்கரவாதத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியாகவும் கூட்டாகவும் எதிர்கொள்வதற்கான எமது முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும்.

சர்வதேச அளவிலும் சரி, உள் நாடுகளிலும் சரி பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவதற்கு உறுதியான வலுவான நடவடிக்கையை எடுக்கத் தயங்கக்கூடாது.

ஜனநாயகத்தைப் பின்பற்றும் அதே வேளை ஏனைய ஜனநாயகங்களுக்கும் ஆதரவை வழங்குவதுடன் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக இதனைப் பயன்படுத்த வேண்டும்.

சார்க் பிராந்தியத்திலும் ஐக்கிய நாடுகளிலும் பயங்கரவாதத்திற்கு எதிராக சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களைப் பின்பற்றி பல நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் இணங்கியுள்ளோம்.

இவ்வாறாக இணங்கிய நடவடிக்கைகள் குறித்து எம்மை மீள அர்ப்பணிப்பதற்கான தருணம் வந்துள்ளது.

### புதிய நடவடிக்கை எடுக்கத் தயங்கக் கூடாது

எமது மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான இடமாக், எமது சமூகங்கள், நகரங்கள், கிராமங்களை மாற்றுவதற்காக பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவதற்கு புதிய நடவடிக்கை எடுக்கத் தயங்கக் கூடாது.

இந்த அமைச்சரவை சந்திப்பு எமது பிராந்திய மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய விவகாரம் குறித்து எமக்கு வழிகாட்டும் என நம்புகிறேன்.

எமது பிராந்தியம் எதிர்கொள்ளும் இன்னுமொரு சவாலையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சர்வதேச நிதி பொருளாதார முறைமையுடன் எமக்குள்ள தொடர்புகள் காரணமாக சர்வதேச பொருளாதார நெருக்கடி எமது பொருளாதாரங்களையும் பாதிக்கலாம்.

கடுமையான எதிர் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் இதனால் எமது பொருளாதாரத்திற்கும் எமது மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் பாதிப்பு ஏற்படலாம். (அ-சி)

## கடந்த இரண்டு கிழமைகளில் ... 1,996 நோயாளிகள் திருகோணமலைக்கு ...

இம்மாதம் 11 ஆம் திகதியிலிருந்து இது வரை நோயாளர்கள், காயங்களுக்கு இலக்கானோர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அவர்களைச் சார்ந்த உதவியாளர் உட்பட மொத்தமாக 1996 பேர் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளது. அவர்களில் 16 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் இவ்வாறு வ... களின் 12 தாய்மாருக்கு குழந்தைகள் பிறந்துள்ளன என்று மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே சிகிச்சை பெற்ற நோயாளர்களில் 632 பேர் வவுனியாவில் உள்ள இடைத்தங்கல் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் - என மேலும் தெரிவிக்கப்பட்டது.

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

இம்மாதம் முற்பகுதியில் ட...னிங் வீதியில் உள்ள பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் முன்பாகத் தீக்குளிக்க முயன்றார் என்றும் அதற்கு முன்னர் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார் என அறிவிக்கப்பட்டது.

இதேவேளை இம் மாதம் 12 ஆம் திகதி இலங்கையைச் சேர்ந்த 27 வயதான இளைஞர் முருகதாசன் ஜெனீவாவில் ஐ.நா. வளாகத்துக்கு முன்னால் தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஈடுபடுத்தியிருக்கின்றனர் என இராணுவத் தலைமையகம் தெரிவித்திருக் கின்றது.

கடந்த 24 மணிநேரத்தில் புதுக்குடியிருப்பு கிழக்கு, அம்பலவன் பொக்கணை, பொதுப் பிரதேசம், சாலை, திருமுறிகண்டி ஆகிய பகுதிகளில் உக்கிரச் சண்டைகள் இடம்பெற்றன என்றும், அதில் விடுதலைப் புலிகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது என்றும், இராணுவத்தரப்பில் சிலருக்கு காயங்கள் ஏற்பட்டன என்றும் இராணுவத் தலைமையகம் கூறியிருக்கின்றது.

புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதியில் தற்கொலைக்குண்டுகளை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும், நீச்சல் தடாகம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன என்று படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

## வன்னியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துவர் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறும் மனிதாபிமான உதவிகளுக்கு அனுமதியளிக்குமாறும் இரு தரப்பையும் எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பால் வன்னிக்குள் சென்று பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை மதிப்பீடு செய்து அவர்களுக்கு உடனடி உதவிகளை வழங்க முடியாதுள்ளது.

மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் துப்பாக்கிக் காயங்கள் மற்றும் குண்டுச் சிதறல்களினால் காயமுற்றவர்களாவர்.

மோதல்களில் நேரடியாகக் காயமடைந்தவர்களில் 300 பேருக்கு நாம் சிகிச்சையளித்துள்ளோம்.

மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ளவர்களில் 2 லட்சம் பேர் மிக அவலம் நிறைந்த சூழலில் வாழ்கின்றனர்.

தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் இடம்பெற்றுள்ளது எனவும் காயப்பட்டவர்கள் மற்றும் பலியானவர்கள் அங்கு சிகிச்சையளிக்கப்படாத நிலையில் இருந்தனர் என்பதையும் அவர்கள் விவரிக்கின்றனர்.

அங்குள்ள மக்களுக்கான இயலாத நிலையை வன்னியிலிருந்து வந்தவர்கள் தெரிவித்துள்ள தகவல்கள் புலப்படுத்துகின்றன.

வவுனியாவுக்கு வந்துள்ள மக்கள் களைத்துப்போயுள்ளனர். பசியின் பிடியில் சிக்கியுள்ளனர். மேலும் அவர்களது ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் குறித்து எதுவும் தெரியாத நிலையிலுள்ளனர். வவுனியாவுக்கு வந்துள்ளவர்களுக்கு நடமாடச் சுதந்திரம் இல்லை. தமது குடும்ப அங்கத்தவர்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கான வழிவகைகளும் இல்லை.

திருகோணமலை மருத்துவ நிலையங்கள் நிரம்பியுள்ள நிலையில் உள்ளமையால் புதிய இடங்கள் தேவைப்படுகின்றன. மருந்துப் பொருள்களும் தேவைப்படுகின்றன.

Microsoft Systems Engineer MCP - MCSE
100% செய்முறைகளுடன் கூடிய நிறைவான வகுப்புக்கள்
Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தராசான்றிதழ், Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு, கணனித்துறையில் வேலை செய்வோருக்கு சர்வதேசதகுதி, வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள், ComTIA A+ (Hardware Technician-AUSTRALIA) கற்கைநெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.
Become an Engineer
புதிய பிரிவுகள் ஆரம்பம் 01.03.2009 07.00AM/12.00PM
MCS
Supported By UNDP/JRRP
விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root 764

PHYSICS => K.Selvan
A/L 2011
Mechanics
Mon, Wed 6.30 - 7.30 a.m
ஆரம்பம்:- 02.03.2009 Mon 6.30 a.m
NEC

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org